Registered No. M. 2330

'SIDDHANTHAM
Vol. 29—No. 11

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே'

மலர் 29 | துன்முகி கார்த்திகை 1956 நவம்பர் | இதழ் 11

உள்ளுறை — பக்கம்

பத்திராசிரியர் : C. M. இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.

உதவிப் பத்திராசிரியர் : புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்

2, சீதாராம நகர், கடலூர் N. T.

ஆண்டுச் சந்தா ரூபா 3 தனிப்பிரதி அணா 4

சமாஜ அறிக்கைகள்

1. மலாய் நாட்டிலும் இலங்கையிலும் உள்ள சமாஜ உறுப்பினர்கள், தயைகூர்ந்து அடுத்த ஆண்டு (1957) சந்தாவை "ம. பாலசுப்பிரமணிய முதலியார், 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை—1" என்ற முகவரிக்கு மணிஆர்டர் மூலம் அல்லது British Postal Order மூலம் கூடிய சீக்கிரம் அனுப்பவும். ஒவ்வொருவரும் தனித் தனியே அனுப்புவதைவிட உறுப்பினர் பலர் கூடி மொத்தத் தொகையை, மேற் கூறியபடி அனுப்பவும். மலாய் நாட்டு உறுப்பினர்கள் சந்தாவைத் திருவாளர்கள் கா. இராமநாதன் செட்டியார், B.A., B.L., அவர்களும், சிவநேயனும் அனுப்பியதைச் சமாஜம் நன்றியுடன் பாராட்டுகிறது. 1957-ம் ஆண்டுச் சந்தாவையும் அம்மாதிரியே எதிர்பார்க்கின்றது. சமாஜம் வி. பி.யில் வசூலிப்பதென்றால் P. P. Form வாங்குவது முதலியவற்றால் காலதாமதம், அதிகச் செலவு முதலியன ஏற்படுகின்றன.

2. இந்தியாவில் உள்ள சமாஜ உறுப்பினர் கூடிய விரைவில் அடுத்த 1957-ம் ஆண்டுச் சந்தாவை மேலே குறித்துள்ள முகவரிக்கே அனுப்பவேண்டுகிறோம். மணியார்டர் கூப்பனில் தங்கள் முழுப் பெயர், சந்தா எண், தற்போதைய தபால் முகவரி முதலியன தெளிவாகக் குறித்தல் அவசியம்.

3. 31—12—1956க்குள் 1957-ம் ஆண்டுச் சந்தாவை அனுப்பாதவர்களுக்கு 1957-ம் ஆண்டு ஜனவரி மாத "சித்தாந்தம்" இதழ் 10—1—57ல் வி. பி. மூலம் அனுப்பப்படும்.—தி. கி. நாராயணசாமி, பொதுச்செயலாளர்.

ஆண்டு விழா

நம் சமாஜத்தின் 51-வது ஆண்டு நிறைவு விழா மெய்கண்டார் தோன்றிய திருப்பெண்ணாகடத்தில் மயிலம் உயர் திரு. சிவஞானபாலைய அடிகளார் அவர்கள் தலைமையில் நடைபெறும். சைவ மங்கையர் மாநாடு சென்னை அரசினர் கல்லூரி இயற்கைப் பாட அசிரியை மதுரை மா. ரா. ச. க. வள்ளி, எம். ஏ. தலைமையிலும், சைவ இளைஞர் மாநாடு "சித்தாந்தம்" துணை ஆசிரியர் புலவர்-முருகவேள், பி.ஓ.எல்.

Regd. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் அம்பலவன்
ஞானகுரு வாரியையுள் நாடு.

மலர் 29 | துன்முகி கார்த்திகை 1956 நவம்பர் | இதழ் 11

உள்ளொளி

(ஆசிரியர்)

அறிவு மூவகைப்படும். உயிர்களிடத்துக் காணும் அறிவு தாழ்ந்த அறிவு. மக்களிடம் காணும் அறிவு நடுத்தர அறிவு. ஞானிகளிடம் காணும் அறிவு பேரறிவு ஆகும். எறும்பு இருக்கப் புற்று அமைத்து, உண்ண இரைதேடிக் கார்காலத்திற்கு வேண்டிய அளவு சேமித்து வைக்கிறது. தேனீ மலர்களிடமிருந்து தேனும் பொடியும் எடுத்துக் கூடுகட்டி அதில்சேமித்துப் பனிக்காலத்தில் உண்ணுகிறது. அச்செயல் வாழ்க்கையில் கூட்டுறவு உணர்ச்சி பெற்றிருக்கும். நாய் தலைவனுக்கு ஊழியம்செய்து அவனது பட்டிகாத்துத் திருடர் உட்புகாமல் காத்து நன்றி செலுத்துகிறது. இவ்வாறே அந்தந்த உயிர் இனங்கள் அவ்வவ்வினத்திற்கு இயற்கையாக உள்ள அறிவில் விளங்குகிறது. இதனை ஔவையார்,

“ வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்கும் செய்யரிதால் ”

என்று பாடியிருக்கின்றார். இது தாழ்ந்த உயிரினத்தில் காணும் சிற்றறிவு என்க

இனி மனிதனிடம் ஐம்புலன்களோடு ஆறும் அறிவும் உண்டு என்று கூறுவர். மனிதன் தன் சுற்றுப்புறங்களில் இருக்கும் பொருள்களை அறிவான். அவற்றின் இயற்கை விதிகளை அறிகிறான். அவைகளைத் தனக்குப் பயன்படுத்திக் கொள்ளுகிறான். துன்பத்தை நீக்கி இன்பத்தை அடையும் வழிகளைத் தன் அறிவின்மூலமாகப் பெறுகிறான். இயந்திரங்

களை இயற்றி உணவு உடை உறையுள் இவைகளை மேன்மைப்படுத்திக் கொள்ளுகிறான். நோய் முதலியவைகளை நாடாமல் வழி தேடுகிறான். கூட்டுறவினால் அடையும் பயன்களை அறிந்து அதனை மேற்கொள்ளுகிறான். பகைமை முதலிய கெட்ட குணங்களினால் வரக்கூடிய போர் முதலிய துன்ப நிலைகளைப் போக்க முயல்கிறான். இது அவனுடைய ஆறாவது அறிவினால் ஏற்படும் சிறிய நிலை ஆகும். இதனை நடுத்தர அறிவு எனலாம்.

இனி, நிரம்பக் கற்றவர்களுக்குப் பேரறிவு என்பது ஒன்று உண்டு. அதுதான் மேலான உயர்ந்த அறிவு. நடுத்தர அறிவு வெளிப்பொருள்களை அறிவதனால் ஏற்படுவது. பேரறிவு என்பது உள்ளே நோக்குவதினால் ஏற்படும் அறிவு. மனிதன் தான் யார்? தன் நிலைமை என்ன? தன் ஆற்றல் யாது? தான் எந்நிலை அடைய முடியும்? முதலிய கேள்விகளைக் கேட்டு அறிந்து நிற்கும் நிலையே பேரறிவு ஆகும். இவ்வறிவுதான் உள்ளொளி என்பது. மேற்கு நாட்டார்கள் கலைகளின் முதிர்ச்சியினால் நடுத்தர அறிவே பெற்றிருக்கிறார்கள். இது வருந்தத் தக்கதென்று டாக்டர் காரெல் என்ற மேல்நாட்டு அறிஞர் கூறுகிறார். உள்ளே நோக்கி, தன்னைப் பற்றி அறிவதே இனி தேவைப்படுகிற அறிவு என்று அவர் வற்புறுத்தி "இன்னம் அறிந்திடா மானிடத் தன்மை" (Man the Unknown) என்ற நூலில் எழுதியிருக்கிறார். ஆனால் கீழ்நாட்டு அறிஞர்களோ இந்த உண்மையை முன்னமே அறிந்துள்ளார்கள். இதனைத்தான் 'உள்ளொளி' என்று மணிவாசகப் பெருமான் கூறியுள்ளார்.

"ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாயதேன்"

என்று அவர் அருளிய அருட்பாவில் உள்ளொளி என்பது அந்த மேல்நிலை ஆகும். அந்த ஒளிதான் இறைவனைத் தோற்றுவிக்கும் பேரொளியாகும்.

இவ் உள்ளொளியைச் சுவாமி சிவாநந்தர் "Intuition" என்ற ஆங்கிலச் சொல்லில் உணர்த்துகிறார்.

"Intuition is an active, inner awareness of the immortal blissfull self within. It is the eye of wisdom through which the sage perceives in

everything the unseen Presence" என்றும், "Intuition is clear perspective of complete knowledge. Intuition opens up new and novel regions of the subconscious mind" என்றும் கூறுகிறார்.

"என்றும் அழியாத பேரின்ப மயமான ஆன்மா தனக்கு உள்ளே இருக்கிறது என்று உண்மையாக உணருவதே உள்ளொளி ஆகும். ஒவ்வொரு பொருளிலும் ஊனக் கண்ணால் காணமுடியாத இறைவனை ஞானிகள் காணும் ஞானக்கண்ணே அவ்வொளியாகும்,"

"நேர்முகமாகவும் உடனேயும் அறியக்கூடிய முழுமையான அறிவின் தெளிவான நோக்கமே உள்ளொளி ஆகும். நெஞ்சுக்குள்ளே உள் நாட்டம் காட்டும் புதிய அற்புதமான தோற்றங்களைத் திறந்து வெளிப்படுத்துவதே அவ்வுள்ளொளி ஆகும்" என்பது அவரது கருத்து.

மேலே குறித்த மூவகை அறிவு நிலைகளுக்கும் மூன்று சொற்களைச் சுவாமிகள் குறித்திருக்கின்றார். அச்சொற்கள் விளக்கமாக இருப்பதினால் இங்கே எடுத்து எழுதப்படுகின்றன.

சிற்றுயிர்களின் அறிவு Instinct என்றும் மக்கள் அறிவு Intellect என்றும் ஞானிகள் அறிவு Intuition என்றும் வரையறுத்துக் கூறுகிறார். இவைகளிலே தாழ்ந்த உயிர்களின் அறிவு மனிதனின் அறிவைக் காட்டிலும் சிறந்ததாக வெளிப் பார்வைக்குத் தோன்றும். உதாரணமாகத் தூக்கணாங் குருவிக்கூடு, எறும்புப்புற்று, சிலந்திவலை, பட்டுப் புழுக்கூடு முதலியவைகளை மனிதன் உண்டாக்குவானா என்று மூதாட்டியார் கேட்கிறார் அல்லவா? ஆனால் உண்மையில் அந்த அறிவு இயற்கை தரும் அறிவே அன்றி, மேன்மையான அறிவு அல்ல என்று அறியவேண்டும். இனி மனிதனுக்கு உள்ள அறிவு இரண்டு அடுக்கு கொண்டது. கீழ் அடுக்கில் உள்ளதே நடுத்தர அறிவு. அதுதான் Intellect என்பது. அதில் சிறந்தவர்கள் மேல்நாட்டுமக்கள். அவர்கள் அறிந்து கண்டுபிடித்து உண்டுபண்ணினவைகள் எல்லாம் உலகியற் செயல்களே ஆகும். அவனுடைய மேலடுக்கில் உள்ள அறிவே Intuition என்ற உள்ளொளி ஆகும். இதனையே கீழ்நாட்டு ஞானிகள் பெற்று முன்னேறியுள்ளனர் என்க.

மேலும் வேறு மொழிகளில் ஆராய்ந்துள்ள நூல்களைக் காட்டிலும் பாரதநாட்டு மொழிகளிலே உள்ளொளியைப் பற்றி நன்றாகக் கூறப்பட்டுள்ளது. எல்லாவற்றிலும் தமிழிலே மிக நன்றாகவும் தெளிவாகவும் வரையறுக்கப்பட்டிருக்கின்றது. தமிழில் சிவஞான போதத்தில் 7-ஆம் சூத்திரம் முதல் 12-ஆம் சூத்திரம் வரையில் ஆறு சூத்திரங்களில் உள்ளொளியின் தன்மை காணுவது, உணர்வது, பயன் தெளிவது முதலிய பகுதிகள் கிடைக்கின்றன. உள்ளொளியைத் தோற்றுவிப்பவன் இறைவனாகிய ஆசிரியன், உள்ளொளியை உணருபவன் சீடனாகிய உயிர், உள்ளொளி மங்காமல் செய்கிறவன் சாதகன் முதலிய பகுதிகள் விளக்கமாக அதில் காணப்படுகின்றன. ஆகவே நமது மக்கள் எளிதில் அறிந்துகொள்ளக் கூடிய நிலையில் ஆகூழ்வயத்தால் இருக்கிறார்கள். அப்படி இருக்கும் மேன்மையான நிலையை நாம் இழந்துபோகாமல் பயன்படுத்திக்கொள்வோமாக! சிவஞான போதத்தை நன்கு படித்து உணர்ந்து சிந்தித்துத் தெளிந்து உள்ளொளியில் வாழ்க்கையை நடத்துவோமாக!

நாம் வாழ

இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை, இராசபாளையம்

தெய்வத் திருநெறிய தமிழ் : திருவள்ளுவம் : நாம் வாழ்தற்கு, தெய்வத் திருநெறிய தமிழ்ப்பண்பே சாலச் சிறந்ததாகும். நம் பண்டைத் தமிழ்ச் சொற்கள் சொற்றொடர்கள் பல, நாம் வாழும் வகையினை நமக்குச் செவ்வனே அறிவுறுத்திக் கொண்டிருக்கின்றன. நாம் அவற்றைக் கையாண்டு வாழ்வோமாயின், நல்வாழ்வு நமக்கு அமைவது உறுதி.

உண்மை, நேர்மை : உள்ளுவதெல்லாம் உயரியதாக, உள்ளத்தினின்றும் பிறப்பதே உண்மை தீமையிலதாகப் பிறக்கும் வாயுரையே வாய்மை; மெய்யினின்றும் வினையும் நல்வினையே மெய்ம்மை, நாடறி வழக்கில், வாய்ம்மையும் மெய்ம்மையுமே உண்மையாம். மேலும், தமிழ் உண்மை

Truth, sincerity, honesty, candour, integrity எனும் ஆங்கிலச் சொற்கள் உணர்த்தும், பரந்த கருத்துக்கள் அனைத்தினையும் அடக்கி நிற்கிறது. இப்படியாக, நம் நினைவும் பேச்சும் செயலும் சிறத்தல் வேண்டும்.

நாம் எதனையும் உள்ளவாறு உணர்தலும் உணர்ந்த வழியே நிற்றலும்வேண்டும்; அதுவே சான்றோர்க் கணியாம் நேர்மை கோடாமையுமாம்.

அறிவு வினைத்திட்பம், முயற்சி : எப்பொருள் (Factual, material, technical and scientific) எத்தன்மைத் தாயினும் யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு என்பர்; ஆனால், அதுவும் தீதொரீஇ நன்றின்பால் உய்ப்பின்மட்டுமே அறிவெனத் தகும்.

உள்ளம் உடைமையே உடைமை. வினைத்திட்பம் என்பது, ஒருவன் மனத்திட்பமே. எண்ணியர் திண்ணியராகப் பெறின், எண்ணிய எண்ணியாங் கெய்துவர்.

முயற்சி திருவினையாக்கும். உலைவின்றித் தாழாது உஞற்றுபவர், ஊழையும் உப்பக்கம் காண்பர்.

போகாறு அகலாமை—செலவு கூடாமை, அகலக்கால் வையாமை : திறனறிந்து தீதின்றி வரும்பொருளையும் அன்பொடும் அருளொடும் சேர்க்க; வருவாய்க்குள் ஒடுக்கிச் செலவு செய்க. அளவறிந்து வாழ்க; அளவறிந்துண்க. ஆற்றின், அளவறிந்தீக; அது பொருள்போற்றி வழங்கும் நெறி.

ஒப்புரவு, சமதர்மம், தமவும் பிறவும் ஒப்பக்கருதும் உளத்திட்பம் : எல்லாரும் தம்முள் ஒருவரையொருவர் ஒத்தவர்—எல்லாரும் சமம் என்பதனை (ஒத்தது) அறிவான் உயிர்வாழ்வான். அவன் அல்லவை தேய நல்லவையே செய்து நலம்பெறுவான். தன்னின் மெலியாரையும் தன்போல் கருதி, முகனமர்ந்த இன்சொலனாய், அவர்தம் துயர் களைவான்; எவர்க்கும் அகத்தானாம் இன்சொலனாய்த் தன்னாலியன்றன உதவுவான். பெரியோரென வியத்தலுமிலான்; சிறியோரென இகழ்தல் அதனிலும் இலான். எதனையும் இனிதே செய்து முடிப்பான்.

முடிவுரை: மேற்கண்ட உண்மை, நேர்மை, அறிவு வினைத்திட்பம், முயற்சி போகாறகலாமை, ஒப்புரவு ஆகிய அடிப்படைப் பண்பேழும் நம் நல்வாழ்விற்கு இன்றியமையாதனவாகும்; இவற்றில் எதாயினுமொன்று குறையினும் தவறினும் நல்வாழ்வு நமக்கில்லை. சிற்றறிவும் சிறுதொழிலுமே யுடைய நமக்கு, இவை அமைவதற்கும் வளர்தற்கும், அளவிலா அறிவும் ஆற்றலும் அமைந்த ஆண்டவனின் தோன்றாத் துணையும் வேண்டும். இப்படியாக, இவை நம்மில் நின்மை பெறப்பெற, நம் நல்வாழ்வும் பெருகும்; மன அமைதியும் நிரம்பும்; மகிழ்ச்சியும் உள்ளூரப் பொங்கித் ததும்பி நிற்கும்.

திருமுறைகளின் பெருமை

(புலவர் முருகவேள், பி.ஓ.எல்.)

தோற்றுவாய்

தமிழ்நாடு எத்துணையோ பல வகைகளில் தனிப்பெருஞ் சிறப்புடையது. ஆயினும், இந்நாளில் அதன் பழம்பெருமைகள் பலவும் பொய்யாய்க் கனவாய்ப் பழங் கதைகளாய்ப் போய்விட்டன. எனினும், தமிழ்நாடு இன்னும் ஒரு சிறிதளவாதல் "இங்குலி வாங்கும் கலம்" போல, மங்காப் புகழொளி வீசித் திகழ்ந்து கொண்டுதான் வருகின்றது. அதற்குரிய சிறந்தவொரு பெருங் காரணமாகத் திகழ்வன: "செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல்" அமைந்த தமிழ்க் கவிதைகளேயாம். "இங்கிலாந்து தேயம் வேறு பிறிதெதனாலு மன்றித் தனது கவிதைகளினாலேயே இத்துணைச் சிறந்த புகழ் வாய்ந்ததாக விளங்குகின்றது,* என மேத்யூ ஆர்னல்ட் என்னும் ஆங்கில அறிஞர் ஒருவர் மொழிந்தமை, நம் அருமைத் தமிழ் நாட்டிற்கே மிகவும் இயைந்ததாக உள்ளது. தமிழ் மக்களின் நயத்தக்க தனி நாகரிகம், தமிழ்க் கவிதைகளால்தான் உலக அரங்கில்

---

* "By nothing is England so glorious, as by her poetry."—Matthew Arnold.

ஓரளவேனும் மதிக்கப்பெற்று விளங்கி வருகின்றது. தமிழ் நாட்டிற்கு இஞ்ஞான்றுள்ள பெருமைகளெல்லாம் பெரும் பாலும் அதன் அழகிய இனிய அரிய கவிதைகளினால் எஞ்சி நின்றனவே யாகும்.

திருமுறைகளின் சிறப்பு

தமிழ்க் கவிதைகளோ பலப்பல திறத்தன. அவைக ளுள்ளே, சைவத் திருமுறைகள் தனிச் சிறப்பிடம் பெற் றுத் திகழ்ந்தொளிர்வனவாகும். மொழி - சமயம் - தத்து வம் - இலக்கியம் - வரலாறு - பண்பாடு - மன்பதை வாழ்க்கை என்னும் பலப்பல துறைகளிலும், சைவத் திரு முறைகள் தமிழ் மக்களின் தனி நாகரிக மேம்பாட்டின் நலங்களைத் திறம்பட விளக்கித் தெளிவிக்கும் சிறந்த பெருங் கருவிகளாகத் திகழ்கின்றன எனலாம். கவிதை நலத்திற்கு வரம்பாகக் கலைஞர்களாற் கொள்ளப்படும் சங்ககாலப் பாடல்களிற் "பாலிற்படு நெய்போல்" மறைய நின்றுள்ள தெய்விகச் சிறப்புநலம், திருமுறைப் பாடல்களில் "ததி நெய்போல்" தெளிவாக விளங்கிச் சிறந்தினிது நிறைந்து காணப்படுதல், அவற்றின் தனிப்பெருஞ் சிறப்புக்குக் காரணமாகும். கலையறிவுணர்வாற் பாடப்பெற்ற ஏனைப் பிற சில உலகியற் கவிதைகளைக் காட்டிலும், இறையரு ளுணர்வாற் பாடப்பெற்ற திருமுறைகளின் 'நிறைமொழி'ப் பாடல்கள் எல்லா வகையாலும் ஏற்றம் மிக்குடையன என் பதில் சிறிதளவும் ஐயமில்லை.

> "அரியகற் றுசற்றார் கண்ணும் தெரியுங்கால்
> இன்மை யரிதே வெளிறு"

> "பலநல்ல கற்றக் கடைத்தும் மனம்நல்லர்
> ஆகுதல் மாணார்க் கரிது"

> "நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
> உண்மை யறிவே மிகும்"

என ஆசிரியர் திருவள்ளுவர் பலவிடத்தும் பகர்ந்தபடி, எத் துணைதான் சிறந்த கலைநூற் புலவராயினும் அவரெல்லாம் முற்றிலும் பிழையற்ற பெற்றியினராதல் இயலாது. முக் குண வயத்தான் முறைமறந் தறைதல் கலைநூற் புலமையர்க்

கெல்லாம் இயல்பேயாம். ஆனல் 'தவத்தான் மனம் தூயராய்ப் 'பொறிவாயில் ஐந்தவித்து' 'ஏகனுகி இறைபணி நின்று' அருள்பெற்றுயர்ந்த 'நிறைமொழி மாந்தர்'தம் அருள் மொழிகள், என்றும் 'பொய்யாமொழி'யாய் நின்று நிலவி வையத் துயிர்களையெல்லாம் வாழவைத்தருளும் மாட்சிமை யுடையன. சமய உணர்வும் தெளிவும் உடைய தக்கோர்கள் அனைவருக்கும் திருமுறைகளின் பெருமை, நிலத்தினும் பெரிதாய் வானினும் உயர்ந்ததாய் நீரினும் ஆரளவிலதாய்த் தோன்றும் என்பது திண்ணம். பிற்காலத்தே தோன்றியருளிய ஆயிரம் ஆயிரம் அருட்பெருஞ் சான்ருேர்கள் அனைவரும், திருமுறைகளை ஓதி ஓதியே சிறப்புற்றுயர்ந்தனர் எனத் துணிந்து கூறலாம்.

திருமுறைகளும் சான்ருேர்களும்

அண்மைக் காலத்தே பேரருட் பெருஞ் செல்வராய்ப் பிறங்கிய இராமலிங்க அடிகளார், சைவத் திருமுறைகளை நாடோறும் தவருது ஓதியே உயர்நிலை எய்தினர் என்னும் உண்மையினை, அவர்தம் திருமொழிகளாலேயே நாம் செவ்விதின் உணர்கின்ருேம்.

"தேன்படிக்கும் அமுதாம்உன் திருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போதுஎன்னை நான்அறியேன்! நாஒன்ருே,
ஊன்படிக்கும், உளம்படிக்கும், உயிர்படிக்கும், உயிர்க்குயிரும்
தான்படிக்கும்! அநுபவங்காண்! தனிக்கருணைப் பெருந்தகையே!"

எனப் போதரும் அவர்தம் திருப்பாடல் இவ்வுண்மைக்குச் சான்று பகர்தல் காணலாம். மேலும், அப்பேரருளாளர் தாமே,

"இலைக்குளநீர் அழைத்து அதனில் இடங்கர்உற அழைத்து அதன்
தலைக்குதலை மதலை உயிர் தழைப்ப, அழைத் தருளியநின் [வாய்த்
கலைக்கும்,வட கலையின்முதற் கலைக்கும்,உறு கணக்கு, உயர்போன்
மலைந்தும்,அறு நிலைந்தும் உற!வன்தொண்டப் பெருந்தகையே!"

என அருளிச் செய்திருத்தல், திருமுறைகளின் பெருமையினைத் தெற்றெனா அறிவியா நிற்கும். இன்னேரனைய பிற

பாடல்களும் எண்ணில உண்டு. தாயுமானவ அடிகள் திருமுறைகள் "மொழிந்த மொழி நிந்திப்பன" என மிகப் பெரிதும் பாராட்டுகின்றார். பட்டினத்தடிகள் "விந்தகப் பாடல்" எனத் திருமுறைகளைப் புகழ்ந்து வியக்கின்றார். சேக்கிழார் அடிகளோ தம் வாழ்நாள் முழுவதும் திருமுறைகளை ஆய்ந்தாய்ந்து நினைத்துக் களித்தவர்; திருமுறைகளாகிய தேன் கடலைக் கடைந்து, பெரிய புராணம் என்னும் பெறலரும் தெய்விக அமிழ்தத்தினைச் செவ்விதில் திரட்டி, நம்மனோர்க்குப் பேரருளோடும் உதவியவர். அவர்க்கு முன்னிருந்த நம்பியாண்டார் நம்பிகளும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பிறருமெல்லாம் திருமுறைகளை ஓதித் திளைத்தவர்களேயாவர்! சிவபெருமான் "நல்லிசை ஞான சம்பந்தனும் நாவினுக்கரசரும் பாடிய நற்றமிழ்மாலை சொல்லியவே சொல்லி வத்துகப்பான்" எனச் சுந்தரமூர்த்திகள் ஒரு பேருண்மையினைக் கண்டுணர்ந்து வைத்து உலகுக்கு அறிவுறுத்தியிருத்தல் கருதற்பாற்று. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் காலத்திற்கு முன்பே "திருமுறை எழுதுவோர் வாசிப்போர்" பெருகியிருந்தனர் என்பதும், அத்தகையோர்களைத் தக்கவாறு பயிற்றி விடுத்தல் சிறந்த பெருந்தொண்டாகக் கருதப்பெற்றுக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது என்பதும், கணநாத நாயனார் வரலாற்றால் புலனாகின்றன.

திருமுறைகள் 'அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப்பயன்களைப் பயந்தேவிடும்' நிறைமொழிகள் என, அவற்றின் பெருமையினைத் தொன்னெடுங் கால முதலே மக்கள் அனைவரும் உறுதியாகத் தெளிந்து ஒழுகி வந்தனர். சான்றோர்கள் பலர் தாம் தாம் விழைந்த பயன்களை விழைந்தவாறே, திருமுறைகளை ஓதி வழிபடுதலால் தொன்றுதொட்டு அடைந்து மகிழ்ந்து வந்துள்ளனர் என்பது, ஆசிரியர் மெய்கண்ட தேவர் வரலாற்றால் நன்கினிது அறியப்படுகின்றது. திருமுறைச் சொற்கள் சொற்றொடர்களைப் பின்னேவந்த பெரியவர்கள் அனைவரும் பற்பல வகைகளில் பெரிதும் போற்றிச் சிறப்பித்துள்ளனர். நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார், நிரம்பவழகிய தேசிகர், மனவாசகங் கடந்தார், சிந்துபூந்துறை முதலிய பெயர்கள் இவ்வுண்மைக்குச் சான்று பகரும். இங்ஙனமே திருமுறைப் பாடல் பெற்ற திருக்கோயில்களும் தலங்களுமே சிறப்பும் முதன்

மையும் மிக்கனவாகப் பிற்காலப் பெருமக்களாலும் அரசர்களாலும் பெரிதும் போற்றப்பட்டுப் புகழ்பெற்றுத் திகழ்கின்றன. திருமுறை ஆசிரியர்கள் தோன்றி நடந்து உலவி வாழ்ந்ததன் பயனாகவே, நமது தென்றமிழ்த் திருநாடானது "சித்திக்குவித்தாகிய தென்னாடு" என அறிவறிந்த மேலோர்களாற் சாலவும் சிறப்பிக்கப் பெறுகின்றது; "புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள் நாம் போக்குகின்றோம் அவமே! இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்றவாறென்று நோக்கித் திருமாலாம் அவன் விருப்பெய்தவும், மலரவன் ஆசைப்படவும்" பெருமை பெற்றுப் பிறங்குகின்றது. திருமுறைகளின் பயனாகவே, எண்ணில்லாத பல பெருங் கோயில்கள் கலைநலஞ் சிறந்த நுண்ணிய பல வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டு, நமது தென்றமிழ் நாடானது "மண்ணகத்தில் விண்ணகம்" (Paradise on Earth) என்று கருதும்படி மாட்சிமையுற்று வயங்குகின்றது. அன்றியும், தாம் தோன்றிய காலம்முதல் இதுகாறும் எத்துணையோ பல நூற்றாண்டுகளாக, எண்ணிறந்த பல்லாயிரம் கோடிக் கணக்கான தமிழ் மக்களின் உளத்தைப் பயன்படுத்தித் தூய்மைசெய்து, வாழ்க்கையினை வளமுறுத்திப் புனிதமாக்கி உயர்வித்து உய்யவைத்து வந்துள்ளன எனின், திருமுறைகளின் பெருமையினை அளவிட்டுரைக்க வல்லார் யார்?

'மறுமலர்ச்சி நூல்கள்'

இனி, திருமுறைகளின் பெருமையினை இஞ்ஞான்றை முறையிலும் நாம் சிறிது ஆராய்ந்து காண்டல் இயலும்! இக்கால மக்கள் சிலர் "மறுமலர்ச்சி நூல்கள்" எனச் சிலவற்றைப் பெரிதும் புகழ்ந்து போற்றக் காண்கின்றோம். உண்மையாக ஆராய்ந்தால், சைவத் திருமுறைகள் மறுமலர்ச்சி நூல்கள் எனப் போற்றப் பெறுதற்கு மிகுதியும் தகுதியும் உரிமையும் உடையனவாதலை யாவரும் உணரலாம். தமிழகத்தின் பொற்காலம் (Golden age) எனப் போற்றத்தகுந்த சங்க காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டோடு முடிந்துபோக, கி. பி. ஆறும் நூற்றாண்டுவரை தமிழகத்தின வரலாறு தெளிவுற அறியப்படாமல் 'இருண்ட காலம்' எனச் சொல்லலாம்படி இருந்து வருகின்றது என்பது அறிஞர் அனைவரும் ஒப்ப முடிந்ததொன்று. இவ்

விடைப்பட்ட காலத்தில் தமிழகமானது எல்லா வகையா லும் இழிநிலையுற்றுக் கிடந்தது என்பதும் எவரும் மறுக் கொணாத செய்தி. இந்நிலையில் திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும் தோன்றிச் செய்தருளிய அருட்பெருஞ் செயல் களால் தான் தமிழக மக்கள் விழிப்புணர்ச்சிப் பெற்றுப் புத்துயிர்பெற்றனர்; தமிழ்நாட்டில் வரலாற்றுச் சிறப் புடைய பலப்பல பெருமாறுதல்கள் நிகழ்ந்தன என்பதனை யும் அறிஞர்கள் அனைவரும் உடன்படுவர். தமிழ்நாட்டில் நிகழ்ந்த இச் சிறந்த பெருமாறுதல்களின் அடிப்படையாக வும் விளைவாகவும் தோன்றியனவே திருமுறைகள் எனின், அவற்றை மறுமலர்ச்சி நூல்கள் என்றுரைத்தற்கண் இழுக் குண்டோ? சங்க காலத்திற்குப் பின்னர் ஏற்பட்ட இருண்டகாலச் சூழ் நிலைகளால் மங்கி மழுங்கிக் கிடந்த தமிழ்மொழியும் இலக்கியமும் கவிதையும் கலையும் தமிழர் வாழ்வும் பிறவும், திருமுறைகளால் பொங்கிப் பொலிவுற் வுற்றுச் செழித்துச் சிறந்தன; புத்துயிர்ப்பும் புத்துணர்ச்சி யும் புதுப்புது வகையான அமைப்புக்களும் சிறப்புக்களும் பெற்று வளரலாயின. சங்ககால நூல்களின் நடையும் போக்கும் கருத்தும் அமைப்பும், திருமுறைகளின் நடையும் போக்கும் கருத்தும் அமைப்பும் வடிவால் வேறுபட்டுத் தோன்றுதல் ஒன்றே, கால நிலையின் விளைவாக எழுந்து சாலத் தழைத்துப் பெருகிய திருமுறைகளை மறுமலர்ச்சி நூல்கள் என வற்புறுத்தப் போதிய சான்றாகும்.

சங்க காலத்திற் பெரும்பாலும் ஒரே வகையாக அமைந்த தமிழ்க் கவிதை அமைப்பு, திருஞான சம்பந்தப் பெருந்தகையால் பலப்பல புதுப்புது வடிவங்கள் பெற்றன. சங்ககால இலக்கியங்களிற் காணமுடியாத இசை நலஞ் சான்ற அரிய இனிய அழகிய தீந்தமிழ்ச் செய்யுள் வகை களை நாம் முதன் முதலாகத் திருமுறைகளிலேயே காண் கின்றோம். பலவகையான சந்த விருத்தப் பாக்களைமட்டுமே யன்றித் திருவிராகம் வழிமொழித் திருவிராகம் திருவிருக் குக்குறள் மொழிமாற்று மாலைமாற்று திருத்தாளச்சதி யாழ்மூரி ஏகபாதம் திருவெழுகூற்றிருக்கை சக்கரமாற்று கோமூத்திரி இயமகம் கூடசதுக்கம் என்பனபோலும் பல திற அமைப்புள்ள வியத்தகு தமிழ்ப் பாடல்களை முதன்முத

லாகத் திருமுறைகளின் வாயிலாகவே நாம் கேட்கின்றோம். ஆதல் பற்றியே,

"செந்தமிழ் மாலை விகற்பச் செய்யுட்க ளால்,மொழி மாற்றும்,
வந்தசொற் சீர்மாலை மாற்றும், வழிமொழி எல்லா மடக்கும்,
சந்த இயமகம், ஏகபாதம், தமிழ்இருக் குக்குறள் சாத்தி
எந்தைக்கு எழுகூற் றிருக்கை, ஈரடி, ஈரடி வைப்பு;

நாலடி மேல்வைப்பு, மேன்மை நடையின் முடுகும் இராகம்,
சால்பினில் சக்கரம் ஆதி விகற்பங்கள், சாற்றும் பதிக
மூல இலக்கியம் ஆக எல்லாப் பொருள்களும் முற்ற,
ஞாலத் துயர்காழி யாரைப் பாடினர் ஞானசம் பந்தர்."

எனச் சேக்கிழார்பெருமான் இவற்றைத்தொகுத்துரைத்து, "மூல இலக்கியம்" எனவும் ஏதுணர்வோடு குறிப்பிட்டுச் சிறப்பித்துப் போற்றியருளினர்! திருமுறைகள் மறுமலர்ச்சி நூல்கள் என்னும் உண்மைக்கு வேறு பிறிது சான்றும் வேண்டுமோ ?

இனி, வேறு பிற சில செய்திகளும் ஈண்டுக் கருதுதற்கு உரியனவாக உள்ளன! சங்ககால நல்லிசைப் புலவர்கள் தங்கள் காலத்து வாழ்ந்திருந்த வேந்தர்களையும் குறுநில மன்னர்களையுமே பெரும்பாலும் புகழ்ந்து பாடிப் போந்தனர். ஆயின் நமது திருமுறை யாசிரியர்களோ எல்லாம் வல்ல சிவம் ஒன்றனையே பாடி மகிழ்ந்தனர். "தம்மையே புகழ்ந்திச்சை பேசினும் சார்வினும் தொண்டர் தருகிலாப், பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்!" என முழங்கும் திருமுறைப் பாடலின் மறுமலர்ச்சி நோக்கச் சிறப்பினை, நாம் ஈண்டு மனங்கொள்ளுதல் தகும். அரசர்களின் போர்ச் செயல்களையே பெரிதும் புகழ்ந்து புனைந்து பாடிய சங்ககாலப் புலவர்களின் மனப்பான்மைக்கும், இறைவனின் அருட்பெருஞ் செயல்களையே வியந்து வியந்து புகழ்ந்துபாடிய திருமுறை யாசிரியர்களின் திருவுளக் குறிப்பிற்கும் இடையே பெரியதொரு புரட்சி மறுமலர்ச்சிபுணர்வு ஊடுருவிநிற்றல் காணலாம். இன்னோரன்ன பிற மறுமலர்ச்சி யுணர்வின் மாண்புகள் பல திருமுறைகளில் நிழலாடித் திகழ்கின்றன.

திருமுறைகளின் தனித்தனிச் சிறப்பியல்பு

திருஞானசம்பந்தர் பாடல்கள் தூய சிறந்த நடைநலனும், மிகுந்த இசையினிமையும், உயர்ந்த கலைத்திறனும், எழில் கனிந்த இயற்கைப் புனைவுகளும் செறிந்து, இளமைக்குரிய பெருமிதவுணர்ச்சியும் வீறும்பெற்று, ஒப்புயர்வற்றுப் பொலிந்து விளங்குகின்றன. திருநாவுக்கரசர் பாடல்கள் அறிவு முதிர்ந்து அனுபவம் பழுத்து மக்கள் வாழ்க்கைக்கு உறுதி பயக்கும் உயரிய கருத்துக்களைத் திட்பநுட்பமுறச் சுவைபெருக உருக்கமாக அறிவுறுக்கின்றன. சுந்தரமூர்த்திகள் அருளிச்செய்த பாடல்களோ, கலையழகும் இசையினிமையும் நகைச்சுவைநலங்களும் பிறவும் கலந்து நிறைந்து, மனித வாழ்வியலின் வாய்மைகளை நம்மனோர்மனங்கொளத் தேற்றுகின்றன. மாணிக்க வாசகர் அருளிய திருவாசகம் அழகிய இனிய கருத்துச் செறிவும், அயரா அன்புநலனும், இறையருளுணர்வில் ஆரா இயற்கை அவாவும் வேட்கையும் மிகுந்து, எளிமை இனிமை தெளிவு முதலிய சிறப்பியல்புகள் அமைந்து, 'கல்லைப்பிசைந்து கனியாக்கவல்ல' உருக்கமும் நெகிழ்ச்சியும் சிறந்து, ஒப்புயர்வில்லாத அன்புப் பெருநூலாக ஒளிர்கின்றது. இறையருளைத் தேடியலைந்து முயன்று பெற்றுய்யும் ஓர் உயிரின் பலதிற உள்ளுணர்ச்சிகளின் வளர்ச்சிப் படிநிலைகளைத் தெளிவுற விளக்கிக்காட்டுந் திறனில் திருவாசகம்போலச் சிறந்த நூல் வேறொன்றில்லை. தன்னை ஓதுவோர் 'சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி' உய்விக்கவல்ல சிறப்பினது திருவாசகம்! சங்ககால நல்லிசைப் புலவர் பெருமக்கள் பாடிய காதலுணர்ச்சியோடு கடவுளுணர்ச்சியையும் கலந்து பிணைத்துப் பாடிக் கலைநலமெலாம் கனிந்து, மெய்யுணர்வுக் கருத்துக்கள் செறிந்த செந்தமிழ்ப் பெருங்கருவூலம் எனலாம்படி ஈடும் எடுப்பும் இன்றித் திருச்சிற்றம்பலக்கோவையார் திகழ்ந்தோங்குகின்றது!

திருமூலர் அருளிய திருமந்திரம் என்னும் நுண்பொருள் மறைநூல், ஆராய்ச்சி அனுபூதி என்னும் இருவகை நெறிகளுள், அனுபூதி நெறியால் நம்மனோர் இறைவனையுணர்ந்து அடைந்துய்யுமாறு பலதிற யோகப்பயிற்சி முறைகளையும், ஐந்தெழுத்து முதலிய அரிய பல மந்திரங்களையும், அவற்றை

உருவேற்றுதற்குரிய பலவகை இயந்திர அமைப்புக்களையும், சிறந்துயர்ந்த தத்துவஞானப் பொருள்களையும், அழகிய இனிய நீதிக் கருத்துக்களையும், ஓதற்கெளியவாய் உணர்தற் கரியவாய்த் திறம்பட விளக்கிச் செல்கின்றது. இங்ஙனமே திருவிசைப்பா, திருப்பல்லாண்டும்; பதினோராம் திருமுறைப் பாடல்களும் பல பெருஞ்சிறப்புக்கள் கொண்டவை. சேக்கிழாரடிகள் திருத்தொண்டர் புராணமோ, தமிழக வரலாற்றுப் பெருங்களஞ்சியம் எனத் தலைசிறந்து விளங்குவது. இங்ஙனம் கடலெனப் பரந்து விளங்கும் இத்திருமுறை நூல்களினின்றே, "சைவ சித்தாந்தம்" எனப் பெயரிய அரிய பெரிய தத்துவக் கொள்கையானது, 'தென்னக மக்களின் பேரறிவின் பெருவிளைவு' என அயல்நாட்டு அறிஞர்களும் பாராட்டும்படி, ஆசிரியர் மெய்கண்டார் முதலிய அருட் பெருந் திருவாளர்களால் வடித்தெடுத்துத் திரட்டித் தரப் பெறலாயிற்றெனின், திருமுறைகளின் பெருமை இனைய தென எம்மனோரால் வரம்புற விளம்பும் தகையதோ?

'எழில் ஞான பூசை'

இத்துணைப் பெருஞ் சிறப்பு மிக்க திருமுறைப் பாடல்களை, அன்பும் ஆர்வமுங்கொண்டு ஓதி இன்புறுதல் தமிழர்கள் அனைவர்க்கும் தலையாய கடமையாகும். ஒரு சிலர்க்கு இத்துணைப் பெருஞ்சிறப்புப் பொருந்திய திருமுறைகள் தாமும், சுவையிலவாய் இழிந்தனவாய்த் தோன்றுமெனின்,

"நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை; அற்றே
பதியின் பிழையன்று; பயந்து நமைப்பு ரந்தாள்
மதியின் பிழையன்று; மகன்பிழை யன்று; மைந்த!
விதியின் பிழை!நீ இதற்கு என்னை வெகுண்டது? என்றான்"

என வரும் கம்பர் பாடலை நினைந்து அவர்பொருட்டு இரங்குவதன்றி, நாம் செய்யத்தகுவது பிறிதொன்றில்லை. ஆர்னல்ட் பென்னெட் (Arnold Bennett) என்னும் ஆங்கில அறிஞரும் 'பன்னெடுங் காலமாக அறிஞர் பெருமக்கள் பலராலும் ஒருமுகமாக வியந்து போற்றப்பட்டுவரும் சிறந்த இலக்கியங்கள் ஒருவர்க்குச் சுவையும் சிறப்பும் இலவாய்த் தோன்றுமெனின், அஃது அவர்தம் குற்றமேயன்றி அந்நூல்களின் குற்றமாகாது' என அறிவுறுப்பார். "தவமும் தவமுடை

யார்க்கு ஆகும்" ஆதலால், உய்தியைவேண்டும் நம்மனோர் அனைவரும் திருமுறைகளின் அருமை பெருமைகளை உணர்ந்து, அவற்றை முறையாக ஓதிவருதல் பெருநலம் பயக்கும். நாம் திருமுறைகளைப் பலகாலும் தொடர்ந்து ஓதி வருவோமாயின்,

"ஆவதென்? இதனைக் கண்டிங் கணைதொறும் என்மேற் பாரம்
போவதோர் றுளது போலும்! ஆசையும் பொங்கி மேன்மேல்
மேவிய நெஞ்சும் வேறோர் விருப்புற விரையா நிற்கும்!"

எனக் கண்ணப்பர் அடைந்தது போன்றதோர் அரிய அனுபவத்தை அடைவோம். நம்மையறியாமலே நம் உள்ளம் ஒருவகைத் தூய்மை யுறுவதையும், புதுவகை அமைதியின்ப உவகை யுணர்வு தோன்றுவதையும் காண்போம். 'அறிவு நூல்கள்' (Books of Wisdom) 'ஆற்றல் நூல்கள்' (Books of Power) என்னும் இருதிற நூல்களுள், திருமுறைகள் ஆற்றல் நூல்களின் வகையினைச் சார்ந்தன வாதலின், அவற்றை ஓதுதலால் நமக்கு இறையருள்நல இன்பவாற்றல் நாளடைவிற் பதிந்து வளர்ந்துவரும் என்பது ஒருதலை.

"ஞானநூல் தனைஓதல், ஓது வித்தல்,
நற்பொருளைக் கேட்பித்தல், தான்கேட்டல், நன்று
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல், ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில்ஞான பூசை"

எனச் சிவஞானசித்தியார் கூறுதற்கேற்பத், திருமுறைகளை ஓதல் ஓதுவித்தல் கேட்டல் கேட்பித்தல் சிந்தித்தல் என்பனவே சிவபெருமான் விரும்பும் சிறந்த 'எழில்ஞானபூசை' என்று துணிந்து கூறலாம்.

முடிவுரை

மேலும், உலகியற் பொருள்களில் காணப்படும் பலதிற அமைதியின்ப அழகினை ஆழ்ந்து ஆராய்ந்துணரும் சான்றோர்களுக்கும், மனித வாழ்க்கையின் மூலை முடுக்கர்களில் ஒதுங்கி மறைந்துகிடக்கும் நுண்பொருள்களை நுனித்தறிய முயலும் அறிஞர்களுக்கும், சமயத் துறையிலும் தத்துவ நெறியிலும் உயர்ந்துயர்ந்து சென்று ஈடுபட்டுத் திளைக்கும் மெய்யுணர்வாளர்களுக்கும், ஒழுக்கத்தூய்மையிலும் இறை

யருளுணர்விலும் சிறந்து அவற்றின் அமைதியின்ப நலத்தினையே விழைந்துநிற்கும் அருளாளர்கட்கும், நிலைத்த அழகுடையதாய்த் திறம்பட நெஞ்சங் கவர்வதாய்த் திண்ணிய பயனுடையதாய்த் துலங்குவது, சிறந்ததொரு கவிதையினைப் படித்துச் சுவைத்து மகிழ்வதேயன்றிப் பிறிதொன்றில்லை.''* எனவே, அத்தகைய சிறந்த தெய்விகக் கவிதைகளின் கருவூலமாகத் திகழ்ந்தோங்கும் திருமுறைகளை அன்பும் ஆர்வமுங்கொண்டு முறையாக ஓதி, நாம் அனைவரும் இம்மை மறுமை நலங்களை இனிது அடைய முயலுவோமாக!

திருமுறை நூல்களின் தெய்வநலஞ் சான்ற
பெருமைகள்தாம் எல்லையிலாப் பெற்றித்(து)—அருமைமிகும்
நல்ல மறுமலர்ச்சி நூல்களென, நாம்அவற்றைச்
சொல்லலாம் உண்மை துணிந்து!

இயற்கைஎழிற் கின்புறுதல், வாழ்வியலைத் தேர்தல்,
மயற்கையறும் மெய்யறிவு வானில்—உயர்ச்சியுறல்,
நல்லொழுக்கில் நின்றருளை நாடல், உடையவர்கட்கு
இல்லை திருமுறைபோல் இன்பு!

மனக்கவலை மாற்றும் மருந்தாகும்! எல்லா
வினைப்பரிய தீக்குணமும் நீக்கும்!—தனக்கிணையில்
தெய்வத் திருமுறைநற் செந்தமிழ் நூல்களைப்போல்,
வையத் துயர்ந்தனஇல் மற்று!

கலைநிரம்பிக் கற்றற் கினிதாய், அறிவின்
நலம்நிரம்பிச், சொற்பொருள்கள் நன்றாய்,—விலைவரம்பின்(று),
உள்ளுந்தொறும் உள்ளுந்தொறும் உள்ளம் உவப்பிக்கும்
தெள்ளு திருமுறைநூற் சீர்!

—முருகவேள்

——

* "To a mind brooding on the silent beauty exhibited in the varied phenomena of nature, to an intellect diving deep into the mysteries that lie in the inmost corners of life, to a soul soaring high into ethereal regions of religion and philosophy, to a spirit seeking serene rest in moral sanctity and Divine grace, nothing appears so permanently beautiful, so certainly impressive and effective as the study of a fine piece of poetry."

—பேராசிரியர். மறைமலையடிகள்

அறநிலைய அலுவலாளர்களுக்கு

ஒரு கையேடு தேவை

சென்னை மண்டலத்தில் தான் முதல் முதலாகச் சட்ட சபைகளினால் உண்டாக்கப்பட்ட அறநிலையக் காப்புப்பகுதி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. பின்னால் அப்பகுதி மற்ற மண்டலங்களுக்கும் தொடர்ந்து சென்றது. அற நிலையச் சட்டம் முதலில் அரசியல் கலக்காத ஒரு பகுதியைத் தோற்றுவித்தது. மெல்ல மெல்ல அச்சட்டம் பல திருத்தப் பாடுகள் பெற்றது. அத்திருத்தப்பாடுகளினால் அற நிலையப் பகுதி ஒரு அரசியல் பகுதியாகவே தற்போது மாறிவிட்டது. அதன் அலுவலாளர்கள் அரசியல் அலுவலாளர்களாகவே மாறிவிட்டார்கள். இப்பகுதி மிகப் பெரிய பகுதியாகச் சென்னையில் விளங்குகிறது. இப்பகுதியில் இரண்டு வகையான அலுவலாளர்கள் இருக்கிறார்கள். ஒரு வகை நேரடியான அலுவலாளர்கள். மற்றொரு வகை நிலைய மேற்பார்வையாளர்கள். நேரடி யலுவலாளர்கள் அரசியல் சேவகர்கள். நிலைய மேற்பார்வையாளர்கள் கோயில் கட்டளை மடம் முதலிய நிலையங்களை மேல்பார்த்து நடத்துபவர்கள். மூன்றாவது வகையும் ஒன்று உண்டு எனலாம். அவ்வகையில் நிலையங்களில் பண்டைக் காலம்முதல் பணிசெய்யும் திருப்பணியாளர்கள். இவர்களில் பல அலுவலர்கள் பரம்பரை உரிமை உடையவர்கள். அவர்களை நல்ல வழியில் செலுத்துபவர்கள் இரண்டாவது வகையினர் எனலாம். அவர்களையும் அடக்கி ஆள்பவர்கள் முதல் வகையினர் என்க. ஆகவே இந்த மூன்று வகையினராக ஏற்பட்டிருக்கும் ஒரு பகுதிதான் அற நிலைய ஆணைப்பகுதி என்னப்படும். அது தற்போது சென்னை, ஆந்திரம், உத்கலம், கேரளம் முதலிய பகுதிகளில் ஏற்பட்டுத் தொழில் செய்து வருகிறது. கன்னட மண்டலத்தில் பண்டைக்காலம் முதற்கொண்டே நாட்டு மன்னர் ஏற்படுத்திய முறைப்படி நடந்துவருகிறது.

அற நிலைய அலுவலகம் ஒரு புதிய அலுவலகம் ஆனதினால் அதனுடைய நிர்வாக விதிகள் அவ்வப்போது வேண்டிய மட்டும்தான் ஆக்கப்பட்டன. ஆகவே போதுமான அளவு அவ்விதிகள் ஆராயப்படவில்லை. அரசியலில் ஏற்கெனவே இருந்துவருகிற பகுதிகளுக்கும் இந்தப் புதிய பகுதிக்கும் பல வகைகளில் வேறுபாடுகள் உண்டு. மற்றப் பகுதிகள் உலகிய பகுதிகள். அறநிலையப் பகுதியோ சமயப் பொறுப்பு வாய்ந்த ஒரு பகுதியாகும். ஆகவே இப்பகுதி

யில் ஈடுபடுகின்ற அலுவலாளர்கள் ஓரளவு சமய அறிவு கொண்டவர்களாக இருக்கவேண்டும். முதலில் உலகீய விவகாரங்களில் ஈடுபட்ட அலுவலாளர்களையே இந்தப் பகுதியிலும் நியமித்தார்கள். இதனால் அடிக்கடி கருத்து வேற்றுமைகள் தோன்றின. எந்த வகையில் அலுவலகம் பணி செய்ய வேண்டும் என்று எண்ணப்பட்டதோ அந்தவகையில் வெற்றி உண்டாகவில்லை. ஆகவே அலுவலாளர்களுக்கு ஒரு கையேட்டு நூல் ஏற்படுத்தி அதில் அவர்கள் தேர்ச்சி பெறல் வேண்டும் என்ற கருத்து தோன்றிற்று. இந்தமுறையில் 1941ம் ஆண்டில் சீர்காழியில் நடந்த சைவ சித்தாந்த மாநாட்டின்போது உலகியர்களும் வைதிகர்களும் கூடி ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்கள். அதில் சில முக்கியமான தீர்மானங்கள் நிறைவேறின. அந்தத் தீர்மானங்கள் உடனே செயல்முறைக்குக் கொண்டுவரப்படவில்லை. ஒரு கையேடு எழுதி வெளியிடவேண்டும் என்ற செய்திமட்டும் பகுதித் தலைவர்களிடம் இருந்துகொண்டே இருந்தது.

அறநிலையப் பகுதி அரசியல் மயம் ஆன பிறகு திரு. சங்கர வடிவேற்பிள்ளை அவர்கள் பகுதித்தலைவர் ஆனவுடனே இந்தக் கேள்வியை மீண்டும் எழுப்பினார்கள். அவர்கள் பல குறிப்புக்களை வரைந்து வைத்தார்கள். அவர்கள் வேறு பணிக்குச் சென்றுவிடவே அவர் வேலையில் அமர்ந்திருக்கும் திரு. உத்தண்டராம பிள்ளையவர்கள் இச்செயலில் மிகவும் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர் பல வட்டங்களுக்கும் மேற்பார்வைக்காகச் செல்லும்போது எல்லாப் பல பெரியார்களையும் கண்டுபேசிக் கையேட்டுக்கு ஒரு திட்டம் வகுத்திருக்கிறார்கள். அந்தக் கையேட்டில் உலகிய விதிகள் சமய விதிகள் இரண்டையும் திரட்டிப் பல பாகங்களாகப் பிரித்து ஒவ்வொன்றிலும் என்னென்ன விவரங்கள் இருக்கவேண்டும் என்றும் குறித்து, அந்த அறிக்கையைப் பல பெரியார்களுக்கு அனுப்பியுள்ளார்கள். அப் பெரியார்களுடைய கருத்துக்கள் தெரிந்தவுடனே ஒரு ஆலோசனைக் குழு நியமித்து அதில் அந்தக் கருத்துக்களைத் தெரியப்படுத்தி ஒரு நூலாக அவைகளைக் கோத்து எழுதி வெளியிடவேண்டும் என்பது அவர்கள் கருத்து. இக்கருத்து மிகவும் முக்கியமானது. இதனைப் பொதுமக்கள் ஆராய்ந்து போற்றவேண்டியது அவர்கள் கடமை. இந்நூல் வெளிவந்தவுடன் அதனை அலுவலாளர்களுக்கு ஒரு பாடநூலாக அமைத்து அதில்

தேர்ச்சி பெற்றவர்களுக்கே வேலைதரவேண்டும் என்று உறுதிப்படுத்துவார்கள். இது ஒரு சிறந்த முறைத்திட்டம் அல்லவா?

கையேடு மூன்று பகுதிகளாகப் பிரிக்கவேண்டும். முதல் பகுதியில் " அறநிலையச் சட்டம், அதின்படி வரையப்பட்டுள்ள உள் விதிகள், இவைகளின் சுருக்கம். இரண்டாம் பகுதியில் இந்து சமயங்களின் பொது நெறிகள், உள் சமயங்களின் சிறப்பு நெறிகள். மூன்றாவது பகுதியில் அச்சமயங்கள் போற்றும் நிலையங்களின் விவரங்கள், அவைகளைப் பரிபாலிக்கும் முறைகள். இதில் பண்டைய முறைகளும் தற்போதைய முறைகளும் விவரிக்கப்படவேண்டும். இந்த மூன்று பகுதிகளில் ஒரு அலுவலாளனுக்குத் தெரியவேண்டிய விவரங்கள் முழுவதும் தெளிவாக எழுதப்படவேண்டும். ஆகவே இந்த நூலைப் படித்துத் தேர்ச்சிபெற்றதும் அலுவலாளன் வெகு சுலபத்தில் கோயில் முதலிய நிலையங்களை மேற்பார்வை பார்க்கக் கூடும் அல்லவா ? இப்படிப்பட்ட ஒரு ஏடு கன்னடமொழியில் மைசூர் சமஸ்தானத்தில் எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். அங்கே அந் நூலையே பின்பற்றி மேற்பார்வை நடத்துகிறார்கள். கேரளநாட்டிலும் சிறப்பாகக் கொச்சி திருவிதாங்கூரில் இவ்விதக் கையேட்டு விதிகள் உண்டு. இந்த நூல் மட்டும் போதாது. நிலையங்களின் கணக்குகளை எழுதவும் அவைகளைப் பரிசோதிக்கவும் ஒரு கணக்குப் பதிவு நூல் ஏடும் வேண்டும். இந்தப் பரிசோதனை நூல் மிகவும் இன்றியமையாதது என்று அறியவேண்டும். இந்த இரண்டு நூல்களைப் பின்பற்றினல் தற்போதிருக்கும் அசட்டைத் தனம் முழுதும் தொலைந்து தூய்மை ஏற்படும்.

இனி முதற் பகுதியில் ஒரு முகவுரை எழுதப்படவேண்டும். அதில் தென்நாட்டில் அறநிலையங்கள் எவ்வாறு பரிபாலிக்கப்பட்டு வந்தன என்ற ஒரு வரலாற்றுக் குறிப்பு இருக்கவேண்டும். பண்டைச் சோழ பாண்டியர்கள் காலங்களிலும் பல்லவர் கருநாடகர் காலங்களிலும் அறநிலையங்களின் நிலையைப் பற்றிச் சுருக்கமாக ஒரு குறிப்பு இருக்கவேண்டும். பிறகு ஆங்கிலேயர் வந்த பிறகு அறநிலையங்களை எவ்வாறு கண்காணித்து வந்தார்கள் என்பதைத் தெளிவுபடுத்தித் தற்போதிய சட்டம் ஏற்படுவதற்குத் தோன்றிய காரணங்கள் குறிக்கப்படவேண்டும். அதில் பின்னர் பகுதியைத் தொடங்கும்போது சட்டத்தில் உள்ள

படி அலுவலாளர்கள்-வகைகள், அவரவர்களின் உரிமைகள் கடமைகள் முதலியவைகள் விவரிக்கப்பட வேண்டும். பண்டை நாளின் உரிமைகள் எவ்வாறு போற்றப்படுகின்றன என்பதும் விளக்கப்பட வேண்டும். அறநிலையங்களின் மேன்மைகள் எவ்வாறு காப்பாற்றப்படுகின்றன. அதற்காகப் பொது மக்கள் செய்யக்கூடிய உரிமைகள் முதலியவைகளும் எடுத்துத் தெளிவாக்கப்பட வேண்டும். இந்தப் பகுதியில் சட்டதிட்டங்களின் அருமை பெருமைகள் முற்றும் மக்கள் அறியும்படி செய்யவேண்டும்.

இனி இரண்டாம் பகுதியில் பொது மக்களும் அலுவலாளர்களும் பொதுவாக இந்து சமயமும் அதன் பிரிவுகளையும் அறிந்து கொள்ளும்படியான விவரங்கள் கொடுக்கப்படவேண்டும். இந்து சமய மூல நூல்கள், அவைகள் கூறும் தத்துவக் கொள்கைகள் முதலிய விவரங்கள் இப்பகுதியில் முதற் பிரிவில் அடங்கியிருக்க வேண்டும். நமது நாட்டில் பொது மக்களுக்கு இந்து சமயத்தின் பொதுக் கருத்துக்கள் செவ்வையாகத் தெரியாது. ஆங்கிலப் படிப்பு பெற்ற மக்களுக்குச் சிறிதுமே தெரியாது. சமயப் பயிற்சி இளமை முதற்கொண்டே அறிவிக்கப் பெறாத காரணத்தினாலும் உலகத்தில் செய்தித் தாள்களில் உலாவும் கடவுள் நம்பிக்கையற்ற கொள்கையினாலும் மிகவும் பாதிக்கப்பட்டுச் சமய உண்மைகளை ஒரு சிறிதும் அறியாதவர்களாகி இருக்கிறார்கள். இவர்களுக்கு நம்பிக்கை பிறக்கும்படியான தெளிவான நடையில் தத்துவங்கள் விளக்கப்படவேண்டும். அதில் இரண்டாம் பிரிவில் உட்சமயங்களைப் பற்றிச் சில குறிப்புக்கள் வேண்டும். சைவம் வைணவம் அத்வைதம் துவைதம் முதலிய பிரிவுகளின் முக்கிய அம்சங்களை விளக்க வேண்டும். அச் சமயங்களின் மூல நூல்கள் ஆசிரியர்கள் அவர்கள் போதித்த கருத்துக்கள் வாழ்க்கைக் குறிப்புக்கள் இவைகள் சுருக்கமாக வரையப்பட வேண்டும். இந்தப் பகுதி மிகவும் முக்கியமானது. ஆகவே, வெகு அழுத்தமாக எழுதப்பட வேண்டும்.

இனி மூன்றாவது பகுதியில் அற நிலையங்களாகிய கோயில், மடம், கட்டளை முதலியவைகளைப்பற்றி விவரங்கள் காணவேண்டும். இந்நிலையங்கள், விவரிக்கப்படும்போது பல உட்குறிப்புக்கள் கொண்டிருக்க வேண்டும். வழிபாடு, விழாச் சிறப்பு, திருப்பணி, சிற்பம், ஓவியம், இன்னிசை,

துதிகள் முதலிய பகுதிகள் எழுதப்பெற வேண்டும். திருப் பணி செய்பவர்களின் உரிமை கடமைகள் விரிக்கப்பட வேண்டும். அலுவலாளர்களுக்கும் பணியாளர்களுக்கு முள்ள தொடர்புகள் விளக்கப்பட வேண்டும். பொது மக்கள் எம்மட்டும் உரிமைகள் கடமைகள் செய்யலாம் என்பதும் கூறவேண்டும். இந்த நிலையங்கள் பொது மக்க ளுக்காகவே ஏற்பட்டபடியால் அவர்களின் பொது நலம் சிறப்பாகப் போற்றப்படவேண்டும். சைவ வைணவக் கோயில்களில் உள்ள வேறுபாடுகள் தொழுகைகளிலும், அமைப்பிலும், உள்ளவைகளைப் பண்டைய சிறப்புக் குன்று மல் தற்காலப் பண்பாட்டிற்கு இழிவு வராமல் பாதுகாக்கப் பெற வேண்டும். இந்த வகைகளில் நன்மதிப்புப் பெறும்படி யாக அலுவலாளர்கள் நடந்து கொண்டு மேல்பார்வையில் அக்கறையோடு கடமை செலுத்தினல் நிலையங்கள் மக்க ளுக்கு மிகவும் பயன்படும். இல்லாவிடில் நிலையங்களால் மக்களுக்கு யாதொரு பயனும் இல்லாமல் போய்விடும். அதனலே அலுவலாளர்கள் தங்கள் கடமை செலுத்திய வர்கள் ஆகமாட்டார்கள்.

நூலில் 3 பிரிவுகளும் இவ்வாறாக இருக்கையில் பின் சேர்க்கைகளாகச் சில விவரங்கள் கொடுக்கப்படலாம். தமிழ் நாட்டில் உள்ள கோயில்களின் புள்ளி விவரங்கள் சிலவற் றைக் கொடுக்கலாம். கோயில்களின் எண், வருமானம், கோயில்களைச் சிறப்பிக்க வேண்டிய செயல்கள், பொது மக்களிடம் பெறக் கூடிய நன்கொடை வசதிகள், பொது மக்களுக்குப் போதிக்கக் கூடிய சமயச் சேவைகள், சமயக் கல்விப்பரப்பு முதலியவைகளும் சேர்க்கப்படலாம். இவை முதலான விவரங்களை இக் கையேடு கொண்டிருந் தால் சமுதாயத்தின் ஒவ்வொரு பகுதியினரும் தெளி வடைந்து அற நிலையங்களை மிக மேன்மையுடன் போற்று வார்கள் என்பதில் ஐயமில்லை.

அரசியலில் மற்றப் பகுதியினர் தங்கள் செயல்களை வினைப்படுத்தும்போது அற நிலையத்தார் மட்டும் இன்னும் மூலைகளில் ஒதுங்கிக் கிடத்தல் செம்மையன்று. ஆகவே தற்போதையத் தலைவர் தொடங்கி இருக்கும் முயற்சியில் அறிஞர்கள் நெஞ்சார உதவிபுரிவார்களாக.—கோவைகிழார்

மரபு - சைவ சித்தாந்த சாரம்

(முற்றொடர்ச்சி: மலர் 29 ; இதழ் 10 ; பக்கம் 480.)

உயிர் கூடி மயங்கிப் பிறப்பு இறப்புப்படும். இவற்றுள் உயிர் பொருந்தும் சகலத் தசை நிலை வகையாவது, ஒன்றிறைலுஞ் சொல்லாததால், பலவினுஞ் சென்று ஒன்று தோன்றுதாதல், இந்திரிய மவுனம், இன்பப்படுதல், துன்பப் படுதல், இன்பத்தில் சிரிப்பு, துன்பத்தில் அழுகை, இரக்கம், கோபம், கிரியை ஆகப் பத்து. இவற்றுள், ஒன்றினாலும் சொல்லாதாதலாவது, சிவமாதி ஐவரும் சிவ தத்துவங்களினின்று வாக்குகளைக் காரியப் படுத்தப் பராசத்தி அருளினாலே கலை ஆணவத்தைச் சிறிது நீக்க, உயிர் கலையே வடிவாய் அருளாகித் துரியத்தில் நின்று பிரகிருதியைப் பொருந்தித் திகைத்து நிற்றல் ஒன்று. பலவினுஞ் சென்று ஒன்று தோன்றுதாதலாவது, சிவமாதி ஐவரும் சிவமுதல்களினின்றும் வாக்குகளைக் காரியப்படுத்தப், பராசத்தி அருளினாலே கலாதிகளான பஞ்ச கஞ்சுகமுடைய உயிர், அருளை மருளைச் சார்ந்து சுழுத்தியினின்று மனதைப் பொருந்தி நினைத்து விடுதல் இரண்டு. இந்திரிய மவுனமாவது, சிவமாதி ஐவரும் சிவமுதல்களினின்றும் வாக்குகளைக் காரியப்படுத்தப், பராசக்தி அருளினாலே கலாதிகளான உயிர்த் தத்துவம் ஐந்தின் சட்டையாகிய உயிர், அருளை மருளைச் சார்ந்து உறக்கத்தினின்று அந்தக்கரணத்தைப் பொருந்திச் சிந்தித்தல் மூன்று. இன்பப்படுதலாவது, சிவம் முதலிய ஐவரும் சிவமுதல்களினின்றும் காரியப் படுத்தப், பராசக்தி அருளினாலே உயிர்த்தத்துவம் ஐந்தின் சட்டையாகிய உயிர் அருளை மருளைச் சார்ந்து கனவு, நனவுகளினின்று அந்தக்கரணத்தைப் பொருந்தி, முக்கால செல்வம், பிறவுபகாரம், புகழ், நல்வினை முதலியவற்றிலும், ஐந்து பருப்பொருள்களினின்று பொறிகள் வழியாய் இன்பப் பொருளிலும் பற்றி யழுந்தல் நான்கு. துன்பப் படுதலாவது, சிவம் முதல் ஐவரும் சிவ முதல்களினின்று வாக்குகளைக் காரியப்படுத்தப், பராசக்தி அருளினாலே கலாதிகளான ஐந்தின் மெய்க்காப்பாளனாகிய உயிர், அருளை மருளைச் சார்ந்து கனவு நனவினின்று அகக் கருவியைப் பொருந்தி, முக்கால தரித்திரம், பசிப்பிணி, பிற இடுக்கண், இகழ்ச்சி, நல்வினை இழப்பு முதலியவற்றிலும்,

ஐந்து பருப்பொருள்களினின்று ஞானேந்திரியத்தின் வழித்தாய்த் துன்பப் பொருளிலும் பற்றி யழுந்தல் ஐந்து.

இன்பத்தில் சிரிப்பாவது, சிவம் முதல் ஐவரும் சிவ முதலினின்று வாக்குகளைக் காரியப்படுத்தப், பராசத்தி அருளினாலே கலாதிகளான ஐந்தின் மெய்க்காப்பாளனாய உயிர் மருளைச் சார்ந்து அருளாகியும், கனவு நனவினின்று அகக்கருவியைப் பொருந்தி, தன் குற்றம் பாராது பிறர் குற்றம் பார்த்து மகிழல்-ஆறு. துன்பத்தில் அழுகையாவது, சிவம் முதல் ஐவரும் சிவமுதல்களினின்று வாக்குகளைக் காரியப்படுத்த, பராசத்தி அருளினாலே கலாதிகளான ஐந்தின் மெய்க்காப்பாளனாய உயிர், அருளை மருளைச் சார்ந்து கனவு நனவினின்று பிறர் குற்றம் பாராது தன் குற்றத்தையும் தனது முக்கால இன்ப இழப்பையும் பார்த்துப் பொறுக்க முடியாதாதல்-ஏழு. இரக்கமாவது, சிவம் முதல் ஐவரும் சிவமுதலினின்று வாக்குகளைக் காரியப் படுத்த, பராசத்தி அருளினாலே கலாதிகளான ஐந்தின் மெய்க்காப்பாளனாய உயிர் அருளை மருளைச் சார்ந்து கனவு நனவினின்று புத்தியைப் பொருந்தி, பிறர் துன்பம் கண்டு பொறுக்காமை-எட்டு. கோபமாவது, சிவம் முதல் ஐவரும் சிவமுதலினின்று வாக்குகளைக் காரியப்படுத்த, பராசத்தி அருளினாலே கலாதிகளான ஐந்தின் மெய்க்காப்பாளனாய உயிர், மருளாகியும் அருளைச்சார்ந்து மருளாகியும் கனவு நனவினின்று அகங்காரத்தைப் பொருந்தி மேலிடல்—ஒன்பது. கிரியையாவது, சிவம் முதல் ஐவரும் சிவமுதலினின்று வாக்குகளைக் காரியப்படுத்த, பராசத்தி அருளினாலே கலாதிகளான ஐந்தின் மெய்க்காப்பாளனாய உயிர், அருளைச் சார்ந்து கனவு நனவினின்று அகக்கருவியைப் பொருந்தி வாக்காதி வழித்தாய் வசனாதி செய்தல்—பத்து. ஆக இவை காரியச் சிறிதறிவின் பத்து நிலைகள்.

தூ நிலையாகிய காரியந் தூநிலை: இப்படி அறியாமை சிறிதறிவு பொருந்தி, பிறப்பு இறப்புப்பட்ட காலத்து, மலபரிபாக கன்ம ஒப்பு வந்தவிடத்து, ஞானசாரியர் அருளினாலே தத்துவ ரூபம், தத்துவதரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம் ஆக 4. மாசிலா நனவு; ஆன்ம தரிசனம், சிவ ரூபம் ஆக 2. மாசிலா கனவு; மாசிலா உறக்கத்தில் அருள் செய்யும். தொழில் யான் செய்வேனென்று கருதல் மாத்திரமே

அல்லாது தாசகாரியத்தில் அடங்குவது ஒன்றுமில்லை. ஆன்ம சுத்தி, சிவதரிசனம், சிவயோகம் ஆக 3, மாசிலாப் பேருறக்கம். சிவபோகம் மாசிலா உயிர்ப்படக்கம். ஆக இப்படிக் காரியத்துநிலை-5. ஆகக் காரியநிலை மூன்று என்று அறிக.

29. உயிர் நடை எட்டு : அருள் நடையில்,

		நுகர்ச்சி
(i)	அகநடை	இரங்கல்
(ii)	புறநடை	நல்ல சொல், நல்ல தொழில்

மருள் மறைவில் அருள் நடையில்,

(iii)	அகநடை	ஏனாதி நாயனார் செயல்
(iv)	புறநடை	எறிபத்த நாயனார் செயல்

ஆக அருள் நடை நான்கு.

இனி மருள் நடையில், இதன் நுகர்ச்சி

(i)	அகநடை	பொறாமை
(ii)	புறநடை	தீய உரை, தீய தொழில்

அருள் மறைவில் மருள் நடையில்,

(iii)	அகநடை	கூடா ஒழுக்கத்திற் புறங்குன்றி
(iv)	புறநடை	பெரிய புராண அதிசூரன் செயல்

ஆக மருள் நடை நான்கு. ஆகமொத்தம் உயிர் நடை எட்டாம்.

30. மும்மல மயக்கம் : (1) ஆணவமல மயக்கம் :— தான் செயலற்றவனை யானே திறவான் என்றும், தனது அல்லாத உடல் முதல் உலகங்களைத் தனது என்றும் கொள்வது.

(2) கன்மமல மயக்கம் :— தலைவனாலே ஊட்டும் பொருள்கள் இன்ப துன்பமாய் வந்து பொருந்துகின்றதைத், தன் முயற்சித் திறத்தினாலே இன்பம் வந்தது என்றும், தன் முயற்சிக்கேட்டினாலே துன்பம் வந்ததென்றும் கொள்வது.

(3) மாயை மல மயக்கம் :— தனக்குப் புறம்பான உடலில் வந்து பொருந்துகின்ற பூச்சிய அபூச்சியத்தைத்

தனக்கே வந்து பொருந்துகின்றதாகக் கொள்வது. பரத்தை, நான் கொடுத்த மதன லீலா விநோதம், மேலான விநோதம் என்று தெளிந்து நின்றவனை மயக்குவதும், அது ஈழான விநோதம் என்று தெளிந்து நின்ற துறவியை மயக்கமாட்டாததும்போல, இம்மும்மல மயக்கமும் கட்டுற்ற காலத்தில் இப்படி மயக்கியும், முத்திக் காலத்தில் மயக்காமலும் நிற்கும்.

31. மலம் ஒன்று: கள்ளுப் போலவும், ஒரு பொருளாகிய இரவு தனது சத்தியாகிய இருளினாலே எண்ணிறந்த பேர் கண்ணொளியை மறைத்தல் போலவும், ஆணவ மலம் ஒரு பொருளாயிருந்து தனது சத்தியினாலே எண்ணிறந்த உயிர்கள் அறிவை அகமறைப்பாக மறைக்கும்.

32. மலச் சேர்க்கை: உயிருக்கு ஆணவ மலம் இயற்கையா? செயற்கையா? இயற்கையானால், பாலுக்கு வெண்மையும், கரிக்குக் கருமையும் ஒரு காலத்திலும் நீங்காததுபோல, உயிரைவிட்டு ஆணவமலம் ஒரு காலமும் நீங்காது. செயற்கையானால், வெள்ளைத் துணியில் அழுக்கேறினதுபோல உயிருக்குத் தொன்மையிலே ஆணவமலமின்றித் தூய்மையாக இருக்கவேண்டும். அப்படியில்லாததால், இயற்கையும் அன்று; செயற்கையும் அன்று. நெல்லுக்கு உமியும் செம்புக்குக் களிம்பும் போல நீங்கும் இயற்கையாகக் கூடியிருந்தது.

33. மல நீக்கம்: உயிர்க்கு ஞானாசாரியர் சந்நிதானப் பட்ட பின்னே? முன்னே? சந்நிதானப்பட்ட பின்பு உயிர்க்கு மலம் நீங்குமெனில், உயிர் மலத்தினால் பிறப்பு இறப்புப்படுவதெல்லாம் திருமேனி கொள்ளாத குறையினாலே என்று வரும். சந்நிதானப்படுமுன்னே மலம் நீங்குமானால், ஞானாசாரியராகத் திருமேனி கொள்ள வேண்டுவதில்லை யென்று வரும். இவ்விரண்டும் அல்லாததால், ஆனந்தமாம் ஆணவ மலத்தின் முளை குருத்தாகிய யான் எனதென்பது, சந்நிதானப்படுமுன்னே உண்மை யோகம் வரையிலுள்ள சிவநல்வினையால் நீங்கும். அந்த மலத்தின் கிழங்கு வேராகிய புகழில் அவாவும் உடல் முதல் உலகத்தில் அவாவும் சந்நிதானப்பட்ட பின்பு நீங்கும். இது, அரசன் தனது வெளி அரங்கமான சதுரங்க சேனையினாலே, தனக்குச் சரி பலவானாகிய பகைவனுடைய வெளி அரங்க

மான சதுரங்க சேனையைக் கொன்று, பின்பு தனது அந்தரங்கமான சேனையோடு தானே வந்து பகைவனையும் கொன்று பகைவனது அந்தரங்கமான சேனையையுங் கொல்லுதல் போல என்று அறிக.

34. மாயைப் பற்று: உயிருக்கு, மாயா கருவியைப் பற்றுந் தன்மையைக் கடவுள் கொடுத்ததாகில், வீடு பேறு காலத்திலும் கொடுக்கவேண்டும். உயிருக்குள்ள தன்மையாகில் வீடு பேற்றிலும் கொடுத்திருந்த உடலைப் பற்ற வேண்டும். இவ்விரண்டும் இல்லாததால், வழிகாட்டி கொடுக்கும் கோலில் குருடனுக்குக் குருடு இச்சையைக் கொடுத்தது போல, ஆணவமலமே உயிருக்கு மாயா கருவியைப் பற்றுந் தன்மையைக் கொடுத்தது.

35. கன்ம தேட்டம்: உயிருக்குப் பிராரத்த கன்மத்தைத் தேடுந் தன்மை, கடவுள் கொடுத்ததாகில் வீடு பேற்றிலும் கொடுக்கவேண்டும். உயிருக்குள்ள தன்மையாகில் வீடு பேற்றிலும் தேடவேண்டும். இவ்விரண்டும் இல்லாததால், குழந்தைக்கு அதன் பசியே, தாய் சங்கினால் கொடுக்கும் பாலைத் தேடும் தன்மையைக் கொடுத்தது போலவும், பிணியாளனுக்கு அவனுடைய பிணியே வைத்தியன் ஒரு கலத்தில் வைத்துக் கொடுக்கும் மருந்தைத் தேடும் தன்மையைக் கொடுத்தது போலவும், உயிருக்கு ஆணவமலமே பிராரத்த கன்மத்தைத் தேடும் தன்மையைக் கொடுத்தது.

36. மறைப்பு ஒன்று: மறைப்பு ஒரு பொருளாக இருந்து, பல உயிர் அறிவின் அறியும் தொழிலை ஒன்று விட்டு ஒன்றைப் புற மறைப்பாக மறைக்கிறது எப்படி? உயிர் ஒரு உடல் எல்லாம் நிரம்பி, ஒரு பொருளை நுகருங்கால் மற்றப் பொருளை நுகரவொட்டாமலும், உயிர் வியாபகமாயிருக்க ஓர் உடலைப் பற்றுங்கால் மற்ற உடல்களைப் பற்றுமலும், உயிர் மல அறிவாய் நிற்குங்காலம் திருவருளை அவன், அவள், அது என்னும் உலகமாகவும், உயிர் சிவ அறிவாய் நிற்கும் காலம் அந்த உலகத்தைத் திருவருளாகவும், இப்படி அனைத்து உயிர்களுக்கும் ஒரு தன்மையாகத் திரை போல மறைத்து நிற்கையால் மறைப்பு ஒன்றென்று அறிக.

37. மாயை ஒன்று: மண் ஒன்றாக இருந்து தனது சத்தியினால் எண்ணிறந்த பேர் நுகர்ச்சிக்கு, எண்ணிறந்த ஊர்களிலே எண்ணிறந்த பாண்டங்களாய் இருத்தல்போல,

மாயை ஒரு பொருளாக இருந்து தனது சத்தியினால் எண்ணிறந்த உயிர்களின் கன்மத்திற்கு எண்ணிறந்த உலகங்களிலே எண்ணிறந்த உடல் கருவியாக இருக்கும்.

38. கன்மம் ஒன்று: இரதம் ஒரு பொருளாக இருந்து எண்ணிறந்த பேர் வியாதிக்கு எண்ணிறந்த ஊர்களிலே எண்ணிறந்த மருந்தாக இருத்தல்போல, கன்மம் ஒரு பொருளாக இருந்து எண்ணிறந்த உயிர்கள் மலத்துக்கும் எண்ணிறந்த உலகங்களிலே எண்ணிறந்த பொருள் நுகர்ச்சியா யிருக்கும்.

39. மூன்றுவகைக் கன்மம்: *பிராரத்தம் நுகர்கையில் அதனை வேண்டும் வேண்டாமென்று முற்றினான். இப்படி முற்றின நினைவை மேல் நடத்த வகை தெரியாத உயிருக்குக் கடவுள், உயிர்களுக்கு விருப்பு வெறுப்பாக முடிகிற நல்வினை, தீவினையைக் காட்டினார். அந்த இருவினையை உயிர் செய்த ஆகாமியமாவது தூல கன்மம். இப்படிச் செய்யும் ஆகாமிய நல்வினை தீவினையாக மாயையிலே கட்டுக்கிடையாகிய சஞ்சிதமாவது சூக்கும கன்மம். இந்தக் கட்டுப்பாட்டுக்குத் தக்கதாக மறு பிறப்புக்குக் கடவுள் கொடுத்த இன்ப துன்ப விடயத்தை உயிர் பொறிகளின் வழியாய் விரும்பி வெறுத்துப் பத்து விதமாக நுகரும் பிராரத்தமாவது அதிசூக்கும கன்மம். ஆக இப்படித் தூல கன்மம், சூக்கும கன்மம், அதி சூக்கும கன்மமாயிருக்கும்.*

40. கன்மம் மாறல்: *நல்வினை, தீவினை இரண்டும் புத்தி பூர்வம், அபுத்தி பூர்வம் என நான்காகும். புத்தி பூருவ நல்வினை: புத்தியில் பட்டு மனமொழி மெய்களினாலே உயிர்களுக்குச் செய்யப்பட்ட இதங்கள் எல்லாம் மனப் பூருவமென்ற பெயரையுடைய புத்தி பூருவ நல்வினையாகும்.*

அபுத்தி பூருவ நல்வினை: உயிர்களுக்குத் தீமையை நினைக்கச் சொல்ல, செய்ய நன்மையாக முடிவதும், ஒருவன் பொருள்களைக் கள்வர் முதலாகிய உயிர்கள் களவில் கொண்டு போவதும், கேவலத்தில் உடல் காரணத்தினாலே நன்மையாக முடிவதும் ஆகும்.

புத்தி பூருவ தீவினை: புத்தியிலே பட்டுத் திரிகரணங்களினாலே உயிர்களுக்குச் செய்யப்பட்ட நன்மை எல்லாம் மனப்பூருவம் என்ற பெயரையுடைய புத்தி பூருவ தீவினை.

அடுத்தி புருவ திவினை: உயிர்களுக்கு நன்மையை நினைக்கச் சொல்ல, செய்ய தீமையாக முடிவதும், கேவலத்தில் உடலின் காரணத்தினலே தீமையாக முடிவதும் ஆகும். ஆக இந்த நால்வகையாகிய இருவினையும் விரவிச் செய்து கட்டுப்பட்ட நல்வினை திவினைகளுக்குத் தக்கதாக இன்ப துன்பங்கள் வரும். முன் செய்த வினைப்பயன் முந்தியும் பின் செய்த வினைப்பயன் பிந்தியும் ஒழுங்குமுறையாக வாராமல், முறுகச் செய்த வினைப்பயன் முந்தி வரும். இது; முன்னே பனை விதை, அதன் பின்னே தெங்கின் விதை, அதன்பின் கத்தரி விதை, அதன்பின் கீரை விதை, இப்படி முன் பின்னுகப் பயிரிட்ட பலன், கீரை 15 நாளிலும், கத்தரி 30 நாளிலும், தெங்கு 5 ஆண்டிலும், பனை 10 ஆண்டிலும் பலன் தருவது போலாம்.

41. பிராரத்த சொரூபம்: உயர்ந்த, தாழ்ந்த சாதியென்றும், காலமிருந்து ஆயுள், அவமிருத்து ஆயுள், இன்ப துன்ப போகம் என்று வரும் ஆறு விதமும் சாதி, ஆயுள், போகம் என 3 வகை.

42. பிராரத்த மூவகை வரவு: தெய்விகம், பௌதிகம், ஆன்மீகம் என மூன்று. தெய்விகம்: பிறப்பு, இறப்பு, நரை, திரை, நோய் முதலியவாய் முன்னிலை இன்றி வரும். பௌதிகம்: மின், இடி, காற்று, மழை, தீ முதலிய பூத முன்னிலையாக வரும். ஆன்மீகம், உயிர்கள் முன்னிலையாக வரும். பிராரத்தம் தான் நினைத்தபடியும் வரும். தான் நினையாதிருந்தாலும் வரும். தான் ஒன்று நினைக்க மற்றென்றுகவும் வரும். இப்படியே மூன்று விதமாக வரும்.

43. மாயா காரிய போகம்: கன்மத்திலேயுள்ள போகமே மாயா காரியத்திலுள்ள போகம். அது இலக்கணையாகப் பொருள் கொண்டு சொன்னது. கன்ம இலக்கணத்திலே போகமென்பது சுபாவமாகப் பொருள் கொண்டு சொன்னது.

44. கேவல சகலப் பேர்: வினை முதல்வரே கேவலத்தைக் கூட்டுவிப்பதும் சகலத்தைக் கூட்டுவிப்பதுமா யிருக்கக் கேவலம் வருகிறபோது சிறிது வேளை ஒரு விசாரத்தை முன்னிட்டுச் சகலமும் வந்து இயைவானேன் என்னில், பஞ்ச விடயங்களை நுகர்தற்குச் சகலத்திற்பட்ட இளைப்பாற்றிவிடவேண்டி, வினை முதல்வர் சிவமாதி பஞ்ச தேவர்

களாகி நின்று நாதமாகி தத்துவங்களைக் கைவிடுதலால் கேவலம் வரும். சகலத்தில் தைரியமாகவே இருக்கின்ற மலத்தை அடக்கவேண்டி, வினைமுதல்வர் சிற்பரமாகி நின்று பல விசாரங்களை முன்னிட்டு வருதலால் கேவலம் நீங்கும். ஆக இவ்விரண்டு மூர்த்தத்தின் தொழிலும் ஒரு காலத்தில் வந்துவிட்டால் கேவலமும் சகலமும் இயையும்.

15. சிவபுண்ணிய காரணம்: அநாதி கேவலத்திலே கிடக்கிற உயிருக்குக் கடவுள் தொன்மைப் படைப்புக் காலத்தில் தாமே தலமாகவும் தீர்த்தமாகவும் மூர்த்தியாக வும் திருமேனி கொண்டதில், சிறப்புத் தலத்தில், புழு முத லானவைகளாய்ப் பிறந்தாலும் வாழ்ந்தாலும் இறந்தாலும் சிவ புண்ணியத்திற்குக் காரணமாகும். விசேட தீர்த்தத் திலே மீன் முதலானவைகளாய்ப் பிறந்தாலும் வாழ்ந் தாலும் இறந்தாலும், திவலை தெறித்தாலும், விலங்கு முதலி யன குடித்தாலும், அதில் மூழ்கினாலும், அந்தத் தீர்த்தம் பாயும் பயிராய்ப் பிறந்தாலும், அந்த நெல் முதலியவற் றைப் பறவை முதலியன உண்டாலும் சிவ புண்ணியத்திற் குக் காரணமாம். ஆலயம் முதலிய சிறப்புள்ள தலத்தில் பிறந்தாலும், வாழ்ந்தாலும், இறந்தாலும், சிவபுண்ணியத் திற்குக் காரணமாம். இந்த மூன்று சூக்கும காரணத்தால் திருமேனிப் பணியாகிய அருச்சனை, அபிடேகம், நைவே தனம் முதலானவைகளுக்குரிய மரங்களாகவும், நெல் முத லிய பயிர்களாகவும், பசு முதலிய விலங்குகளாகவும் பிறப் பர். இது சிவ புண்ணியத்திற்குத் தூலகாரணம்.

16. சிவபுண்ணியம்: தொன்மைப் படைப்பு முதல் வீடுபேறு வரை உயிர்களுக்குக் கட்டுப்படுகின்ற வேறு வினை யென்ற பெயரையுடைய சிவ புண்ணியம் உபாயம், உண்மை என இருவகைப்படும். அதில் ஒவ்வொன்றும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நாலாகும். அப் படிப் பிரிந்த எட்டும் அறிந்தும் அறியாமையுமாகப் பிரிந்து பதினாறாகும்.

அறியாது செய்யும் உபாயச் சரியை: ஒருவன் உயிர் புண்ணியமாகச் செய்யப்பட்ட பொருள் முதலானவை கிரியாசாரியராகிய குருவுக்கும் கைலாசம் வாழ் பரமசிவ உபாய வடிவின் ஒப்புருவுக்கும், மும்மலத் தீர்ந்த சங்கமத் திற்கும் உபகாரமானாலும், ஒருவன் பொருள் அரசர், கள்

வர் முதலிய காரணங்களினாலே இம்மூன்று வடிவிலும் உபகாரமானாலும் அறியாமை பூருவ உபாயச் சரியை யாகும்.

அறியாது செய்யும் உபாயக் கிரியை: கோகர்னத்தில் பழைய சிவலிங்கத்தில் குருட்டுப் பறைச்சி வில்வ அர்ச்சனை சிவ நிசியில் செய்ததும், வேணுவனலிங்கத்தில் இடையன் பால் அபிடேகம் செய்ததுமான இவ்வகைப் பணிகளினாலே, அந்த மூன்று வடிவையும் தொட்டு வழிபட்ட பணிகள் எல்லாம் ஆகும்.

அறியாது செய்யும் உபாய யோகம்: திருமேனியில் திருவாபரணம் திருட நினைந்தவனும், திருமேனி காவற்காரனும் திருமேனியே தியானமாக இருப்பது முதலாகவுள்ள தியானங்களாக, அந்த மூன்று வடிவையும் தியானம் பண்ணுவது ஆகும்.

அறியாது செய்யும் உபாய ஞானம்: வேதாகமங்களை ஆராய்ந்து ஐந்து பருப்பொருள் சூரியன், சந்திரன், உயிர் ஆக எட்டு மூர்த்தி கொண்டதாகவும், பரநாதம், பரவிந்து, அபரநாதம், அபரவிந்து ஆக அருவம் நான்கும், சதாசிவன் என்ற அருவுருவம் ஒன்றும், மகேசுரன், உருத்திரன், அரி, அயன் ஆக உருவம் நான்கும் ஆக இந்த நவமூர்த்தமாகவும் இன்னும் பல வேறுபாடுகளாகவும் பரம்பொருள் இருக்கும் என்றும், மூல உலகுகள் எல்லாம் அவன் செயலென்றும், பிறரிடத்தில் சொற்பொழிவு செய்கின்ற புகழே நமக்கு வேண்டுவதென்று நிலைத்து நிற்பது ஆகும். ஆக அறியாது செய்யும் உபாயச் சிவபுண்ணியம் நான்காம். இந்த நான்கினுக்கும் பலன் பூமியில் பிறந்து நல்வினைத் துய்ப்பில் சற்றுச் சிறப்பாகவும், ஒன்றுக்கொன்று உயர்ந்த போகமாகவும் நுகர்வர்.

அறிந்து செய்யும் உபாயச் சரியை: கிரியாசாரியராகிய குருவுக்கும் கைலைவாழ் பரமசிவ உபய வடிவின் ஒப்பு உருவுக்கும், மும்மலம் தீர்ந்த சங்கமத்துக்கும், ஒருவன் தனது பொருள் முதலியவற்றைத் திருமேனி தீண்டுவார் கையில் கொடுத்துப் பணி செய்வதும், ஆலயத்தில் அலகு, மெழுக்கு, விளக்கு முதலியவை இடுதலும், பூந்தோட்டம், மாலைப் பணி முதலியவையும், மற்றும் திருமேனியைத் தீண்டாமல் செய்யும் பணிகளும் ஆம். இதற்கு மறு

பெயர் மனப்பூர்வம். இதற்குப் பலன் சிவ உலகில் உயர் நிலை பெற்று வாழ்தல்.

அறிந்து செய்யும் உபாயக் கிரிபை: மூன்று வடிவையும் தான் தொட்டு வழிபட்ட பணிகள் எல்லாம் ஆகும். இதன் பலன் சிவ உலகில் சிவனுடைய அருகில் உயர்நிலை பெற்று வாழ்தல்.

அறிந்து செய்யும் உபாய யோகம்: மூன்று வடிவே பொருளாக நம்பித் தியானம் செய்வதாம். பலன்: சிவ உலகில் சிவன் அருகில் சிவ சொரூபம் பெற்றுப் பிரதி பிம்பம்போல இருந்து வாழ்வர்.

அறிந்துசெய்யும் உபாய ஞானம்: வேதாகமங்களை ஆராய்ந்து கிரியாசாரியரை ஆவாகன மூர்த்தமென்று அறிந்து பரமசிவன், ஐந்து பருப்பொருள், திங்கள், ஞாயிறு, உயிர் ஆக எட்டு மூர்த்தி கொண்டவனாகவும், பரநாதம், பர விந்து, அபரநாதம், அபரவிந்து ஆக அருவம் நான்கும், சதா சிவ அருவுருவம் ஒன்றும், மகேசுரன், உருத்திரன், மால், அயன் ஆக உருவம் நான்கும் ஆக ஒன்பது வடிவாகவும், பின்னும் பல வேறுபாடாகவும் இருப்பன் என்றும், அண்டங்கள் எல்லாம் அவன்செயல் என்றும், அந்தப் பொருளிலே அவனுக்கு அன்பு பிறப்பதாகவும், இந்தப் பயனே தனக்கு வேண்டுவதென்றும், அறிந்து நிலைத்து நிற்பதாம். பலன்: சிவ உலகில் சிவனருகில் சிவவடிவைப் பெற்று இருந்து சிவன் திருவுளத்திலே அடைத்தருளும். அவை எல்லாம் அறிந்திருந்து பின்பு பூமியில் பிறந்து முக்காலக் காட்சிக்கு உடையவராகவும், வசவு அருள் இவற்றிற்குத் தலைவராகவும், சிவனைக் காண வாய்ப்புப் பெற்றிருப்பர். இந்த நான்கு புண்ணியத்தையும் புகழ் அவாவிச் செய்தாலும் விளையாட்டாகச் செய்தாலும் பூமியில் பிறந்து நல்வினை நுகர்ச்சியிலும், அறியாதுசெய்யும் சிவ புண்ணிய நுகர்ச்சியிலும் சற்றுச் சிறப்பாகவும், ஒன்றுக்கொன்று உயர்ந்த நுகர்ச்சியாகவும் இன்பத்தை நுகர்வர். இப்படி எந்த எந்த தெய்வங்களை நோக்கிச்செய்த புண்ணியத்திற்கும் அந்தந்த பதமுத்தியே பலனாகக்கூடும்.

உண்மைச் சிவ நல்வினை எட்டில் அறியாது நிகழ்ந்த உண்மைச் சிவ நல்வினைச்சரியை. உயிர் நின்ற சிற்பரம்பெருகி, ஞானசாரியராக இப்பொழுது திருமேனி கொண்டதென்று

சற்றும் புத்தியில் படாமல், தாழ்ந்தார் ஒத்தார் உயர்ந்தாராகக் கருதி, அந்த உபாயவடிவின் ஒப்புருவில் அபுத்திபூருவ உபாயச் சரியை கூடுவதுபோல இந்த உண்மை வடிவிலுங் கூடுதல் ஆம். பலன்: ஞானசாரியர் எழுந்தருளின உலக வட்டங்களிலே புல், மரம் போல்வன ஊறு ஆகிய ஓர் அறிவு உடையதாகவும், அட்டை, சங்கு போல்வன ஊறு, சுவை ஆகிய இரண்டறிவுடையதாகவும், கறையான், எறும்பு போல்வன ஊறு, சுவை, நாற்றம் ஆகிய மூன்று அறிவுடையதாகவும், வண்டு, நண்டு போல்வன ஊறு, சுவை, நாற்றம், ஒளி ஆகிய நான்கு அறிவுடையதாகவும், மக்கள், விலங்கு போல்வன ஊறு, சுவை, நாற்றம், ஒளி, ஓசை ஆகிய ஐந்து அறிவுடையதாகவும், ஒருசார் விலங்கு, மக்கள் இந்த ஐந்தறிவும் பகுத்தறிவு ஒன்றும் ஆக ஆறு அறிவு உடையதாகவும், திருமேனிக்கு உபகாரம் ஆகிறதாகவும் இருந்து வசிப்பர்.

அறியாது செய்த உண்மைக் கிரியை: திருமேனியைத் தாழ்ந்தார், ஒத்தார், உயர்ந்தாராகக் கருதி, அந்த உபாய வடிவின் ஒப்புருவில் அறியாமையால் செய்த உபாயக் கிரியை கூடுவதுபோல இந்த உண்மை வடிவிலும் கூடுதலாம். பலன்: ஞானசாரியர் எழுந்தருளின திருநகரிலே மனிதனைப் பிறந்து திருவாக்குக் காதிலே கேட்கத்தக்கதாக அருகில் வாழ்வர்.

அறியாது செய்த உண்மை யோகம்: திருமேனியைத் தாழ்ந்தார், ஒத்தார், உயர்ந்தாராகக் கருதி அந்த உபாயவடிவின் ஒப்புருவில் அறியாமையில் செய்த உபாய யோகம் கூடுவதுபோல இந்த உண்மைவடிவிலும் கூடுதலாகும். பலன்: ஞானசாரியர் எழுந்தருளின திருநகரில் மனிதராகப் பிறந்து திருமேனியிலே நிகழ்கின்ற திருவாக்கு முதலாகிய நடையுடை தோற்றத்தைப்போல நாமும் கண்டுபிடித்துப் பார்ப்போம் எனக் கருதி நடந்து வாழ்வர்.

அறியாது செய்த உண்மை ஞானம்: ஞானசாரியரை உயர்ந்தாராகக் கருதி, ஞான சாத்திரங்களை ஆராய்ந்து, தலைவரே திருமேனி கொண்டதென்று நாம் நினைத்துக்கொள்ள வேண்டுமென்றும், உலகங்களெல்லாம் மாயா காரியமாக இருக்கிறதென்றும், நமக்கு இனிமையான சொற்களைக் கேட்டறிந்துகொள்வோம்என்றும் காத்திருந்து வாழ்தலாம்.

(தொடரும்)

உ

அப்பர் சுவாமிகள் தெப்பக்குளத் திருப்பணிக்குத்
" திருநாவுக்கரசர் மாட்சியும் வரலாறும் "
என்ற புத்தகத்தை வாங்கிப்

பொருளுதவி செய்தவர்களின் பெயர்

பாகாங் மாகாணம்

1. குவாந்தன் ஜில்லா

குறிப்பு: பெயர்களுக்கு முன் ஸ்ரீ என்றும், எண்களுக்குப் பின் வெள்ளி என்றும் சேர்த்துப் படிக்க.

பி. கோவிந்தசாமி 100, பி. எஸ். டி. முத்துராமன் செட்டியார் 11, எல். சி. டி. இலக்குமண செட்டியார் 7, எஸ். துரைராஜ சிங்கம் 7, டி. எஸ். வி. எல். சுப்ரமணியம் செட்டியார் 5, வி. இ. காசி 5, ஜி. காசி ராஜா 10, வி. பி. எல். வெள்ளையப்பச் செட்டியார் 11, எம். என். ஏகப்பச் செட்டியார் 5, வி. எஸ். எம். சோமசுந்தரம் பிள்ளை 21, ஆர். எம். வி. ஆர். பழனியப்பா 5, வி. இராமன் செட்டியார் 5, வி. ஆர். எம். எம். மெய்யப்பச் செட்டியார் 5, கே. என். ராஜா 5, எஸ். இராஜரத்தினம் 10, ஏ. கிருஷ்ணப்பா 5, ஏ. விஸ்வலிங்கம் 5, ஏ. சிவசம்பு 5, சி. சிவசுப்ரமணியம் 5, ஐ. தியாகராஜா 5, வி. சொக்கலிங்கம் 5, கே. பெரியசாமி 5, என். சுவாமிநாதன் 5, கே. வேலுப்பிள்ளை 5, குலசிங்கம் 5, ஏ. எஸ். மணியம் 5, கே. சரவணமுத்து 5, சி. பாலசுப்ரமணியம் 5, எஸ். மெய்யப்பச் செட்டியார் 21, வித்யார்த்தி 5, எஸ். மாணிக்கம் 5, எஸ். கணபதிப் பிள்ளை 5, எஸ். கணேசப் பிள்ளை 5, எல். ஆர். எம். இராமசாமி செட்டியார் 5, முத்து 5, கே. இராமநாதன் 5, எஸ். கணேசன் 5, என். பூர்ணவேலு 5, எஸ். ஆறுமுகம் 5, அரசப்பப்பிள்ளை 5, எஸ். கந்தையா 5, லக்ஷ்மி விலாஸ் போஜன சாலை 5, ஆர். வரதராஜலு 6, ஆர். ஆறுமுகம் 5, எஸ். முருகேசு 5, எஸ். சொக்கலிங்கம் 5, எஸ். கே. சரவணமுத்து 5, கே. ஆர். ஆர். இராமநாதன் செட்டியார் 5, என். இராமசாமி 5, எஸ். சிதம்பரப் பிள்ளை 5, தியாகராஜா 5.

2. பெக்கான் ஜில்லா

எஸ். சிவகுருநாதன் 5, எஸ். டி. சிவம் 5, வி. சேதுகாவலர் 5.

3. ஈஹப் ஜில்லா

கே. முருகப்பா 5, ஆர். மணவாளன் 5, பெரியசாமிப் பிள்ளை 5, பெரிய கருப்பாப் பிள்ளை 5, கே. இலக்குமணன் 5, எஸ். துரைசாமி 10, கே. தேசிக பத்தர் 5, எம். கே. கோவிந்தசாமி 5. எஸ். கே. அம்பலவாணர் 5, பி. எஸ். துரைசாமி 5, என். எஸ். மணியம் 5, எஸ். மயில்வாகனம் 5, எம். எஸ். மணியம் 5, கே. வயிரமுத்து 5, எம். மாரிமுத்து 21, எம். தங்கையா 5, எஸ். ஆனந்தன் 5, வி. முருகையா 5, ஏ. கே. இராமய்யா தேவர் 11, எஸ். சேதுபதி 5, கே. மாணிக்கம் 5, எஸ். கந்தையா 5, கே. வைத்திநாத அய்யர் 5, எம். தம்பிப் பிள்ளை 5, எஸ். சின்னப்பு 5, இ. மயில்வாகனம் 10, எஸ். சின்னையா 5, சங்கரநாயர் 5, இ. அருளானந்தம் 5, ஆர். இராஜகோபால் 5, எம். மயில்வாகனம் 5, எஸ். அரியநாயகம் 5, எஸ். துரைராஜா 5, வி. எஸ். வெங்கடசுப்ப அய்யர் 5, ஏ. நடராஜா 5, வி. குமாரசாமி 5, எஸ். விஸ்வலிங்கம் 5, ஆர். எஸ். இராமநாதன் 5, எஸ். தம்பிநாதன் 5, வி. எஸ். மணியம் 5, எஸ். நடராஜா 5, எம். செல்லையா 5, வி. செல்லப்பா 5.

4. லிப்பிஸ் ஜில்லா

எம். எஸ். லிங்கம் 5, எம். செல்லையா 5, கே. சரவணமுத்து 5, டி. இ. நாதன் 10, என். கணபதி 5, எம். கதிர்வேலு 5, பி. பாலகிருஷ்ணன் 5, எம். எல். எஸ். பெட்டி 5, கே. சின்னதம்பி 5, என். வல்லிபுரம் 5, எல். திருச்செல்வம் 5, டி. வேலுப் பிள்ளை 5, ஏ. முருகேசு 5, கே. ஆறுமுகம் 5, எஸ். சின்னையா 5, டி. சுப்பிரமணியம் 10.

5. பெந்தாங் ஜில்லா

இ. பொன்னம்பலம் 10, எம். மகேசன் 5, சி. சின்னதுரை 5, பி. சிவலிங்கம் 5, இ. நாகேந்திரம் 5, கே. சதாசிவம் 5, எஸ். பொன்னையா 5, ஏ. ஆறுமுகம் 5, ஏ. மகாலிங்கம் 5, எஸ். கந்தையா 5, எஸ். அம்பலவாணர் 5, ஏ. வேலுமயிலும் 5, டாக்டர் எஸ். கனக

லிங்கம் 5, கே. காளிமுத்து 5, டி. அருணாசலம் 6, கே. சின்னையா 6, டி. எஸ். நாதன் 6, எஸ். சங்கரன் 5, எஸ். சின்னத்துரை 5, கே. வீரசத்தி 10, எம். எஸ். மணியம் 5, டி. சரவணமுத்து 10, எஸ். சிங்காராஜா 5, கே. ஆறுமுகம் 10, வி. கோபால அய்யர் 5, எ. இராஜகோபால் 5, சிவகுரு 5, எ. அருணாசலம் 5, பாரதா ஸ்டோர்ஸ் 5, எஸ். சிவனடியார் 5, பி. சின்னத்தம்பி 10, எ. எஸ். லிங்கம் 5, எ. பொன்னுத்துரை 5, டாக்டர் சிவஞானம் 20, கே. செல்லத்துரை 5.

6. நெகிரிசெம்பிலான் ஜில்லா

வி. இராசையா 5, எ. எஸ். முத்து 5, வி. ஆறுமுகம் 10, என். வி. மாணிக்கம் 5, கே. கே. பிள்ளை (கே. கணபதி பிள்ளை) 5, எம். ஆறுமுகம் 5, வி. கனகசபை 5, சி. சிவபாக்கியம் 10, எஸ். எ. இராமய்யர் 10, எம். காசிலிங்கம் 5, என். செல்லையா 10, எ. மயில் வாகனம் 5, எ. இ. இராமசாமி 5, வி. சபாபதி 5, எஸ். வில்வராஜா 5, பி. டி. இராஜசிங்கம் 5, எம். கதிர்வேலு 5, எம். செல்லத்துரை 5, எ. பொன்னையா 15, கே. நாகலிங்கம் 5, டி. மதியாபரணம் 5, டி. வாமதேவன் 5, வி. கந்தையா 5, கே. சுப்ரமணியம் 5, எ. பால கந்தரம் 5, எஸ். டி. அரசு 5, எஸ். கதிர்வேலு, ஆர். காசிநாதன் 5, டி. எஸ். டி. தேனப்ப செட்டியார் 5.

7. காமரான் ஹைலாந்து

எஸ். ஆர். சுப்பராயன் 11, எம். பி. சாமி 5, ஆர். பச்சையப்பன் செட்டியார் 11, எஸ். பி. குமரன் 5, ஆர். பெருமாள் 5, என். அழகு பிள்ளை 5, எம். கருப்பையா பிள்ளை 5, சி. இராமசாமி 10, கனக ரத்தினம் 5, என். கந்தசாமி 5, எஸ். ஆர். குமாரசாமி 5, ஸ்ரீரங்கன் 5, எஸ். ஆர். சாமி 5.

சிலாங்கூர் மாகாணம்

1. கோலாலம்பூர் ஜில்லா

மனோன்மணி விலாஸ புத்தகசாலை 101, என். பொன்னையா 10, சிவநேயன் 10, டி. முத்துக்குமரன் 5, ஆர். ஷண்முகம் 7, கே. இராமநாதன் செட்டியார் பி.எ., பி.எல். 25, எஸ். ஆர். கனசு

சபாபதி முதலியார் 5, வி. சுந்தரம் 5, எஸ். வீரசிங்கம் 5, எ. பொன்னையா 5, கே. டி. நாகராஜ செட்டியார் 10, எஸ். வெங்கடப்ப செட்டியார் 10, இந்திய பேமஸ் பாலிகாட் கம்பனி 25, விவேகானந்த புத்தகசாலை 10, வி. கோவிந்த முதலியார் அண்டு சன்ஸ் 10, கஸ்தூரி பாலிகாட் கம்பெனி 10, அசோகா பாலிகாட் கம்பனி 5, சுப்ரமணியம் அண்டு கோ 5, பி. டி. பிள்ளை 33, ஆர். இலிங்க தேவர் 51, எம். சி. டி. எம். கார்பொரேஷன் 10.

2. நிள்ளாங் ஜில்லா

எ. சீனிவாஸ நாயுடு 20, எ. இரத்தினம் 5, எம். கே. இராமலிங்கம் 5, வி. மாணிக்கவாசகம் 5, எ. கருப்பைய்யா 5, எஸ். விருசத்தம்பி 5, ஆர். வி. கந்தைய்யா 5, எ. சபாரத்தினம் 5, எம். மாணிக்கம் 5, கே. மயில்வாகனம் 5, டி. குணரத்தினம் 110, டி. பரமகுரு 11, எஸ். வி. இராமசாமி செட்டியார் 10, எம். எஸ். எம். சுந்தரம் பிள்ளை 10, டி. கிருஷ்ணசாமி 5, பி. பொன்னுசாமி பிள்ளை 5, டி. மருதய்யா 5, எஸ். நடராஜ பத்தர் 5, கே. எம். முத்து கிருஷ்ண ரெட்டியார் 5, எம். பழனியாண்டி 5, பாரத மாதா விலாஸ் 5, டி. அழகர்சாமி 5, என். எஸ். கண்ணபிரான் 5, வி. குழந்தை 10, எஸ். பொன்னையா 5, ஆர். எம். எம். இலக்ஷ்மணஞ் செட்டியார் 5, டி. பொன்னுத்துரை 5, என். சபாபதிப் பிள்ளை 5, பி. சீனியப்பன் 5, கே. சிவரத்தினம் 5, எ. பொன்னுத்துரை 5, ஆர். கந்தமுத்து 5, எஸ். வி. சின்னைய்யா 5, எஸ். இராமநாத அய்யர் 5, எம். ஆர். எம். கே. குமரப்ப செட்டியார் 5, எ. எம். முத்துராமன் செட்டியார் 5, எம். ஆர். எஸ். பி. சுப்ரமணியம் செட்டியார் 5, ஆர். இருள்ப்பன் 5, கே பரமசிவம் 5, சி. சிவசம்பு 5, ஷண்முக விலாஸ புத்தகசாலை 10, கே. தம்பி பிள்ளை 5, எஸ். செல்லத்துரை 5, வி. சொக்கலிங்கம் 5, பி.கே. முனியாண்டி 10, எ. வைத்தியலிங்கம் 5, எ.அரசரத்தினம் 5, Mrs. செல்வராஜா 5, வி. சிவப்பிரகாசம் 5, பி. அப்புத்துரை 5, எஸ். சீனித்தம்பி 5, சி. சுப்ரமணியம் 5, வி. இராயர் பிள்ளை 5, சி. கந்தையா 5.

3. கோலசிலாங்கூர் ஜில்லா

எ. நாராயணசாமி பிள்ளை 20.

சாது அச்சுக்கூடம், சென்னை-14

தலைமையிலும் 1956ஆம் டிசம்பர்மீ 30உ ஞாயிற்றுக்கிழமை (துன்முகி, மார்கழி, கசு-ம் நாள்) முதல் மூன்று நாட்கள் சிறப்பாக நடைபெறும். நிகழ்ச்சி நிரல் அடுத்த இதழில் வெளிவரும்.—தி. கி. ரா., செயலாளர்.

மொழி வழி நாடு பிரிந்து அமைந்த பிறகு நிகழும் இம் மாநிலச் சைவ மாநாட்டில் சமய ஆக்கவேலையில் ஈடுபாடுடையவர்களும், சமய சபைகளின் பிரதிநிதிகளும் அவசியம் கலந்து சிறப்பிக்கவும்.

செய்தித்திரட்டு

25—10—56. சென்னைத் தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையம் (வேலூர் தேவஸ்தான இறைபணி மன்றம்) 3-வது ஆண்டு விழா, கவர்னர் ஸ்ரீ பிரகாசா அவர்கள் தலைமையில் நடந்தது. திரு. கே. பாலசுப்பிரமணிய ஐயர் பேச்சு நிகழ்த்தினர்.

26—10—56, 28—10—56. திருமுறை மகாநாடு நடந்தது. பல பெரியார்கள் பேசினார்கள்.

20—10—56, 2—11—56. பெண்ணாகடம் களப்பாளர் மேடு, மெய்கண்ட தேவர் சிவாச்சிரமம் குருபூசை விழா. திரு. சபா-சிவப்பிரகாசம் பிள்ளை அவர்கள் சிவஞானபோத விசாரணை நிகழ்த்தினர். பல அறிஞர்கள் கலந்துகொண்டார்கள்.

3, 4—11—56. கொழும்பு 3-ம் திருக்குறள் மாநாடு: செட்டியார் தெரு, 156, கொழும்பு, இலங்கை, பம்பலப்பட்டி இந்து கல்லூரி சரசுவதி மண்டபத்தில் சர் கந்தையா வைத்தியநாதன் துவக்கி வைக்கப் பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றினார்கள். தமிழ் நாட்டிலிருந்து டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியாரும், கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களும் பேசினார்கள்.

3—11—56 முதல் 8—11—56 வரை கந்தர் சஷ்டிச் சொற்பொழிவுகள். கோவை இரத்தின விநாயகர் கோயில் முதலிய பல இடங்களில் நடைபெற்றன. பல அறிஞர்கள் கலந்து கொண்டார்கள்.

பிரிவாற்றுமை

திருவாளர் M. P. S. வேலாயுதம் பிள்ளை அவர்கள் இடீ றென்று 7–10–56, 3-30மணிக்கு, 5, பவழக்காரத் தெருவில் தமது இல்லத்தில் சிவபதம் அடைந்தார் எனக் கேட்டு வருந்துகிறேம். அன்னர் நியூ இந்தியா இன்ஷ்யூரன்சு கம்பெனி இன்ஸ்பெக்டராக 30-ஆண்டுகள் பணியாற்றினர். சென்னை அடியார் மன்றத்தைத் தோற்றுவித்து அதில் ஓயாது சிவப்பணி செய்துவந்தார். அவரது திருச்செயல்கள் சித்தாந்தத்தில் அடிக்கடி வந்துள்ளன. அவர் சிவபதம் அடைந்தபோது சிவஞர் சுவாமி தெய்வானந்தர், திரு. சச்சிதானந்தம் பிள்ளை, பஞ்சரத்தினம் பிள்ளை முதலியோர்கள் அனுதாபம் தெரிவித்தார்கள். மனைவியார், இரண்டு புதல்வர்கள், இரண்டு புதல்வியர்கள், மருகர் ஒருவர் இருக்கின்றர்கள். அவர்களுக்கும் நண்பர்களுக்கும் அனுதாபம் தெரிவிக்கின்றேம்.

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by D. Mangayarkarasi and V.K. Punithavathi. Edited by C M Ramachandran Chettiar, B.A, .B.L., and Published by S.Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhanta Maha Samajam, 2, Seetha Rama Nagar, Cuddalore N. T.